யாழ்ப்பாணம்

பக்கங்கள்:- பத்து

*Registered as a News paper in Sri Lanka*

விலை ரூபா. 6.00

# வலம்புரி

## The Valampuri

ஆசியா கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 27 செவ்வாய்க்கிழமை (10.06.2003) தொலைபேசி - 2223378 ஒலி 173

# இடைக்கால சபை அமைப்பது தற்போதைய தேவையாகும்!

## முஸ்லிம்களும் பேச்சுக்களில் பங்குபற்ற வேண்டும்

## டோக்கியோ மாநாட்டில் பிரதமர் உரை

(விசேட செய்தியாளர் விசாகன்)

**வடக்குக் கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது, தற்போதைய தேவையாக இருக்கின்றதென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.**

**யப்பானில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் தொடக்க உரை ஆற்றிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

யப்பானின் தலைநகர் டோக்கியோவிலுள்ள அகாசாகா பிறின்ஸ் ஹோட்டலில் மிகவும் பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு நேற்று யப்பான் நேரப்படி காலை 9.05 மணிக்கு ஆரம்பமாகியது.

சர்வதேச பிரதிநிதிகள், உலகப் பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ள இம்மாநாட்டினை யப்பானியப் பிரதமர் யுனிச்சிரோ கொய்சுமியும் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

இவ்வாரம்பவுரையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், வடக்கு கிழக்கில் மீள்கட்டுமானம், அபிவிருத்தி மற்றும் நிர்வாகம் ஆகியவற்றுக்கு பொறுப்பான இடைக்கால நிர்வாக சபையினை அமைப்பது அவசியமானது.

அத்துடன் முஸ்லிம் மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கும் வகையில் முஸ்லிம் மக்களின் பிரதி

(10ம் பக்கம் பார்க்க)

டோக்கியோ மாநாட்டில்...



# சமாதானப் பேச்சை புலிகள் தொடர வேண்டும்!

மணிக்கு ஆரம்பமாகியது.

சர்வதேச பிரதிநிதிகள், உலகப் பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகள்

தமா மேற்கண்டவாறு ... தார்.

அவர் அங்கு மேலும் பேசுகை

வகையில் முஸ்லிம் மக்களின் பிரதி

(10ம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சை புலிகள் தொடர வேண்டும்!

## டோக்கியோ மாநாட்டில் ஆமிடேஜ்

**(டோக்கியோ மாநாட்டு மண்டபத்தில் இருந்து அன்ரனிஜீவா) சமாதானப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகள் மீண்டும் கலந்து கொண்டு சமாதானத்தின் மீதான தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டும் என்று அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சாட் ஆமிடேஜ் டோக்கியோ மாநாட்டில் வைத்து விடுதலைப் புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

டோக்கியோவில் அகாசாகா பிறிணஸ் ஹோட்டலில் நேற்று ஆரம்பமான இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இணைத் தலைமை வகித்து உரையாற்றிய அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச சர் றிச்சாட் ஆமிடேஜ் மேற்கண்ட வேண்டுகோளை சர்வதேச சமூகத்தின் மத்தியில் விடுதலைப் புலிகளுக்கு பகிரங்கமாக விடுத்துள்ளார். அவர் அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

வடக்கு கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்திப் பணிகள் குறித்து விடுதலைப் புலிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள விரக்தியை நான் நன்கு உணர்ந்துள்ளேன். அத்துடன் விடுதலைப் புலிகளின் விரக்தி நிலையை இலங்கை அரசும் உணர்துள்ளது. இந்நிலையில் இலங்கை அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டே ஆக வேண்டும் என்று இலங்கை அரசைக் கேட்டுக்

(10ம் பக்கம் பார்க்க)

# டோக்கியோ மாநாடு நேற்று ஆரம்பம்

## எதிர்பார்த்ததைவிட அதிக நிதி கிடைத்தது!

(டோக்கியோ அகாசாகா பிறின்ஸ் ஹோட்டலில் இருந்து அன்ரனிஜீவா)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இரண்டு நாள் மாநாடு யப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள அகாசாகா பிறின்ஸ் ஹோட்டலில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

யப்பானியப் பிரதமர் யுனிச்சிரோ கொஸ்சுமி இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சாட் ஆமிடேஜ் ஆகியோர் இணைந்து தலைமை உரை நிகழ்த்தினார்கள்.

நேற்று நடைபெற்ற இம்மாநாட்டில அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்ரேலியா, இந்தியா, பாகிஸ்தான், நோர்வே உட்பட 50 நாடுகளின் பிரதிநிதிகளும் 22 சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளாததினால் நோர்வேயின் சார்பில் அந்நாட்டின் முக்கிய அமைச்சர்களோ, பரதி அமைச்சர்களோ கலந்து கொள்ளவில்லை. எனினும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஒலிவ்கெச்ஸ்ரோவின் தலைமையில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர், யப்பானுக்கான நோர்வேத் தூதுவர் உட்பட 30 பிரதிநிதிகளும், இந்தயாவின் சார்பில் யப்பானுக்கான இந்திய உதவித் தூதுவர் பிறைம் நந்தா மற்றும் தூதரக அதிகாரிகள் ரமேஷ் சங்கர், அஸ்வின் மகாஜன் ஆகியோரும்,

அமெரிக்காவின் சார்பில் அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர்

(10ம் பக்கம் பார்க்க)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் யப்பான் பிரதமர் யுனிஸ்ரோ கொயுசுமி யும் கைலாகு கொடுக்கும் காட்சி.




இலங்கையின் புனர்நிர்மாணம், அபிவிருத்தி சம்பந்தமாக நேற்று டோக்கியோவில் நடை பெற்றுக் கொண்டிருக்கும் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆரம்ப உரையாற்றும் போது...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசும்-விடுதலைப் புலிகளும் சமாதானத்தைக் குழப்பி நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்த மாட்டார்கள்

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் ஜயலத் நம்பிக்கை தெரிவிப்பு

(தென்மராட்சி)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்பி மீண்டும் நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்த மாட்டார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை. இது விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மிகவும் இறுக்கமான தீர்மானத்தினைக் கொண்டுள்ளார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா நேற்று யாழ்ப்பாணத்தில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் உறுதிபடத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள றான் பங்களாவில் நடாத்தப்பட்ட இச்செய்தியாளர் மாநாட்டின் போது அமைச்சின் செயலாளர் இ.ஜெயரத்தினம் மேலதிக செயலாளர் எஸ்.குமாரதாஸன் யாழ்.அரச செயலக திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை ஆகியோரும் உடனிருந்தனர்.

அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா அங்கு தொடர்ந்தும் குறிப்பிடுகையில்;

புனரமைப்பு,புனர்வாழ்வு அமைச்சு மூலம் வட பகுதியில் எத்தகைய புனரமைப்புப் பணிகளும் செய்யவில்லை எனச் சிலர் திட்டமிட்டு என்மீது வீணான குற்றச்சாட்டுக்களையும்,பழிகளையும் சுமத்தி வருகின்றனர்.ஆனால்"எனது அமைச்சு மூலம் வடபகுதிக்கும்,விஷேடமாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குப் பல்வேறு விதமான திட்டங்களைப் பல கோடி ரூபா செலவிட்டுச் செய்துள்ளேன். இனிவரும் காலத்திலும்செய்வேன்.

அத்துடன் கடந்த 20 வருடகாலமாக யுத்தத்தின் அகோரப்பிடிக்குள் சிக்குண்டு தவித்த யாழப்பாண மக்கள் மீது நான் கருணை கொண்டு மனிதாபிமான நோக்கில் பணியாற்ற வேண்டும் என்ற தூய எண்ணத்துடனேயே செயல்படுகின்றேன்.

### யாழ்ப்பாணப் புனரமைப்பு

யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புகள் மிகவும் கூடுதலாக உள்ளன.ஆயினும் அரசிடம் இருக்கும் வளமோ மிகவும் குறைந்தது.எமது கணிப்பின் பிரகாரம் யாழ்ப்பாணத்தைப் புனரமைப்பதற்கு ஆயிரம் பில்லியன் யு.எஸ். டொலர் நிதி அவசியமாகும்.தற்போது யப்பானில் இடம் பெற்றுவரும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் எமக்குக் கூடுதல் நிதி கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

### யாழ்.பொது நூலகம

நேற்று யாழ்.பொது நூலகத்தினைச் சென்று பார்வை யிட்டேன். இந்நூலகத்தைப் பற்றி யாழ்.மாநகர சபையின் ஆணையாளருடன் கலந்துரையாடினேன். வெளிநாடுகளில் உள்ள சர்வதேச நூலகங்களுடனான இணையத்தள வலைப் பின்னலை ஏற்படுத்த ஆவன செய்யப்பட்டு வருகின்றன. இந்நூலகத்தினை மாதாந்தம் பராமரிக்க 5 லட்சம் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு 22ம் நூற்றாண்டை மனதில் கொண்டும்,வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கையர்களிடம் நிதிஉதவியைப் பெறும் பொருட்டு யாழ்.பொது நூலக நம்பிக்கை நிதியம் ஒன்றினை உருவாக்குவது பற்றிய திட்டம் உருவாக்கப்படவுள்ளது.

### மீள் குடியமர்வு கொடுப்பனவு

உலக வங்கியிடம் இருந்து பெறப்பட்ட 125 மில்லியன் ரூபா நிதியைக் கொண்டு இதுவரை 4724 குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்பட்டுளளது. மீள் குடியமர்ந்துள்ள ஏனைய குடும்பங்களுக்கும் இக்கொடுப்பனவுகளை வழங்குவதற்கு உலக வங்கியிடம் நிதி கோரப்பட்டுள்ளது. இந்நிதி கிடைத்ததும் இதனை வழங்குவோம்.

இது விடயத்தில் பிரதேச செயலர் பிரிவுகளில் கொடுப்பனவுப் படிவங்களில் பயனாளிகளிடம் இருந்து கையொப்பங்கள் பெறப்பட்டும். கொடுப்பனவு வழங்கப்படாமல் இருக்கும் நிலை பற்றி செய்தியாளர்கள் அமைச்சரிடம் சுட்டிக் காட்டினர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

### மின்சார விநியோகம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 48 ஆயிரம் பாவனையாளர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட வேண்டும். இதனை வழங்குவதற்குரிய எமது அமைச்சு அமைச்சரவையினதும் திறைசேரியினதும்.அனுமதி,அங்கீகாரம் பெற்ற நிலையிலேயே 40 மில்லியன் ரூபாவை கூல்எயர் நிறுவனத்திற்கு கடனாக வழங்கியது. அதன் மூலம் தான் தற்போது மின்சாரம் வழங்கக் கூடிய நிலை உருவானது.

மேலும்,தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பாவனையாளருக்கும் மின்சாரம் வழங்கவேண்டும். எனது அமைச்சு வழங்கிய நிதி மூலம் தான் கூல் ஏயர் நிறுவனம் 22 மெகாவாட் மின்சாரத்தினை வழங்க முடிந்துள்ளது.

### உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் ஒருலட்சத்து பதினோராயிரம் குடும்பத்திற்கு உலர்உணவினை வழங்க எனது அமைச்சு மூலம் 80 இலட்சம் ரூபா செலவிடப்பட்டு வருகிறது. இதனை விட எமது அரசாங்கம் பதவியேற்றது முதல் வன்னியிலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள 26 ஆயிரம் குடும்பங்களுக்கும் உலர் உணவு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. முன்னய அரசின் காலத்தில் அங்கு உலர்உணவு விநியோகம் செய்யப்படவில்லை.

### உலக உணவுத்திட்டம்

இத்திட்டத்தின் மூலம் தொடாசியாக மூன்று வருடங்களுக்கு கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் வேலைக்கான உணவு நிகழ்ச்சியின் அடிப்படையில் 3 இலட்சம் மனித வலுவுக்கான நிதியாக 21 மில்லியன் யு.எஸ். டொலர் கிடைத்துள்ளது.

அத்துடன் மேற்படி இருமாவட்டங்களில் முந்நூறுக்கு மேற்பட்ட சிறு சிறுதிட்டங்களை இது வரை பூர்த்தி செய்துள்ளோம்.மேலும் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் போசாக்கின்மை இல்லாதொழிக்கும் பொருட்டு கர்ப்பிணிப் பெண்கள்,பாலூட்டும் தாய்மார்கள் 3 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் ஆகியோருக்கு போசாக்குணவினையும் வழங்கிவருகின்றோம்.

### யாழ்.திறந்த வெளி அரங்கு

யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு அருகில் இருக்கும் யாழ். திறந்த வெளி அரங்கினை யுனேஸ்கோ நிறுவனத்தினர் 40 மில்லியன் ரூபா செலவில் நவீன தொழில் நுட்ப வசதிகள் கொண்ட அரங்காக மாற்றுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.இதன்முதற்படியாக எனது அமைச்சு 5 லட்சத்தினை இப்போது அமுல் செய்துள்ளது.

### அதேஇடத்தில் சேவை

யாழ்.அரச செயலகத்தில் எனது அமைசசின் ஏற்பாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்களை "அதே இடத்தில் சேவை" எனனும பெயரில் இரு நாட்கள் நடத்தி 733 பேருக்கு பிறப்புச் சான்றிதழ்களை வழங்கியுள்ளோம். இருநாட்களிலும் 1729 விண்ணப்பங்கள் கிடைத்தன.

### முகமாலைக்கு மின்சாரம்

ஏ-9பாதையை 24 மணி நேரமும் திறந்திருக்கச் செய்யும் நோக்கில் முகமாலை சோதனைச் சாவடிக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.'எக்கோ' நிறுவனத்தின் நிதியுதவியுடன் இத் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

### பரிவர்த்தனைத் திட்டம்

யாழ்.மாவட்டத்தில் உள்ள பத்திரிகையாளர்களை பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ் தென்பகுதிக்கு அழைத்துச்செல்கின்ற திட்டம் ஒன்றினை நான் மிக விரைவில் அமுல் செய்யவுள்ளேன்.

### ஐஸ் தொழிலகம்

வடமாகாண கடற்றொழிலாளர்களின் சங்கங்களின் சமாசத்தினால் அமுல் செய்யப்படவுள்ள ஐஸ் தொழிலகத்திற்கு 6 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு 3மில்லியன் வழங்கப் பட்டுள்ளது. இத்தொழிலகத்தினை அமைப்பதில் உள்ள பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக 512வது படையணியின் கேணல் உடவத்த வுடன் தொடர்பு கொண்டு அனுமதி வழங்கும்படி கேட்டுள்ளேன் என்று அமைச்சர் ஜயலத் மேலும் தெரிவித்தார்.

(இ-77)



டோக்கியோ நிதி வழங்கும் மாநாடுஆரம்பமாவதற்கு முன்னர் றிச்சாட் ஆம்டேஜும் ரணில் விக்கிரமசிங்காவும் கைலாகு கொடுக்கும் காட்சி.



டோக்கியோவில் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் யப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோற்றிக்கோ காவாகுச்சியும் கைலாகு கொடுக்கும் காட்சி.

# 4 ஆயிரம் பேருக்கு உதவும் திட்டம்

## பட்டினிக்கெதிரான நிறுவனம் அமுல்

(தென்மராட்சி)

பட்டினிக்கெதிரான நிறுவனம், தென்மராட்சிப் பிரதேசத்தில் உளள 8 கிராமஅலுவலகர் பிரிவுகளைச் சேர்ந்த 4 ஆயிரம் பேருக்கு உதவும் திட்டம் ஒன்றினை அமுல் படுத்த உள்ளது.

இது தொடர்பான விளக்கக் கூட்டம் ஒன்று நேற்று சாவகச்சேரிப் பிரதேசசபையில், தென்மராட்சிப் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பட்டினிக்கெதிரான நிறுவனப் பிரதிநிதிகள் சம்மந்தப்பட்ட கிராம அலுவலர்கள் அறவழிப் போராட்டக்குழு தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி திட்டத்தின் கீழ் ஆயிரத்து நூறு விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளும் 150 பேருக்கு கோழிவளர்ப்பிற்கான உதவிகளும் வழங்கப்படுவதுடன் கிணறுகள் புனரமைப்பு மற்றும் மேசன்வேலை, தச்சுவேலை புரிபவர்களுக்கு உபகரணங்கள் வழங்கல என்பன இடம பெறவுள்ளன.

இதேவேளை சங்கத்தானை கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட 42 தச்சுத் தொழிலாளர்கள் கடந்த கால யுத்தம் காரணமாக தமது உபகரணங்களை இழந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-77)

## உளவளத்துணை சிகிச்சை நிலையங்கள்

(சுதுமலை)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள 8 மாவட்டங்களிலும் உள்ள உளவள துணை சிகிச்சை நிலையங்கள் மற்றும் இடைநிலை சுகாதாரப் பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

மேலும் இதனூடாக பொதுமக்களிற்குத் தேவையான சிகிச்சை மற்றும் ஆலோசனைகள் விஸ்தரிக்கப்படும் எனவும் மேற்படி நிலையங்களிற்குத் தேவையான உத்தியோகத்தர்களை நியமித்து அவர்களிற்கு பயிற்சிகளை வழங்கி மாதாந்த ஊதியம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக எதிர்வரும் 3 மாத காலப்பகுதிக்குள் சகல வைத்தியசாலைகளிலும் கடமை புரியும் வைத்திய அதிகாரிகளுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு அவரகள் மூலமாக ஆய்வுகூட உதவியாளர்களிற்கு பயிற்சிகள் வழங்கப் பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-252)

## வாகன சாரதிகளின் கடமை நேரம்

(சுதுமலை)

பொது நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் உள்ள அரச திணைக்களங்கள், அமைச்சுக் காரியாலயங்கள், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் கடமைபுரியும் வாகன சாரதிகளுக்கான புதிய கடமைநேரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வாரத்தில் 5 நாட்கள் கடமைபுரியும் சாரதிகள் தினமும் 9 மணி நேரம் கடமைபுரிய வேண்டும் எனவும் வாரத்தில் 6 நாட்கள் கடமைபுரியும் சாரதிகள் தினமும் ஏழரை மணிநேரம் கடமைபுரிய வேண்டும் எனவும் சனிக்கிழமை கடமைபுரிபவர்கள் வாரத்தில் 45 மணிநேரம் கடமைபுரிந்து சனிக்கிழமையில் ஆறரை மணிநேரம் கடமைபுரிய வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-252)

## கதிர்காமத்திற்கு பாதயாத்திரை

(கொழும்பு)

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் இருந்து வேல் தாங்கிய வண்ணம் கதிர்காமத்திற்கான பாதயாத்திரை ஒன்று இன்று ஆரம்பமாக உள்ளது.

இப்பாதயாத்திரை கிழக்குக் கரையோரமாகச் செல்லவுள்ளது.

இவ்யாத்திரையில் எடுத்துச் செல்லப்படும் வேல் கதிர்காம உற்சவ காலத்தின்போது அங்கு வைக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து முனீஸ்வரன் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது.

(தி)

## ஆசிரியப் பணியில் ஓய்வு பெறுகிறார்



கொக்குவில் இந்துக்கல்லூரியில், ஆசிரியை திருமதி விமலா தேவி கணேசரட்ணம் இன்று தனது ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

அகவை அறுபதில் ஒய்வு பெறும் ஆசிரியை அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைப்பட்டதாரியும், திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டவர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவியான ஆசிரியை திருமதி விமலாதேவி கணேசரட்ணம் அவர்கள் 30 வருடங்கள் ஆசிரியப்பணியை ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது

மாணவர்களின் அன்புக்கு பாத்திரமான ஆசிரியை அவர்கள் தனது சேவைக்காலத்தில் சான்றாண்மை மிக்க மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந)

# இந்தியாவில் இராணுவத்தளம் அமைக்க அமெரிக்கா விருப்பு

(வாஷிங்டன்)

தனது இராணுவத் தளம் ஒன்றை இந்தியாவில் அமைக்க அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகன் அண்மையில் விடுத்த ''இந்திய - அமெரிக்க இராணுவ உறவும் அதன் எதிர்பார்ப்புப் புலப்பாடும்'' என்ற தலைப்பிலான அறிக்கையையே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க, இந்திய இராணுவ உயர் அதிகாரிகளிடம் காணப்பட்ட நேர்காணலை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

ஆசியாவின் மையப்பகுதியில் இந்தியா அமைந்துள்ளதுடன் கிழக்கு ஆசிய, மத்திய கிழக்கு ஆசியா ஆகியவற்றின் இணைப்புப் பகுதியாகவும் இந்தியா விளங்குகின்றது.

ஆசியப்பிராந்தியத்தில் ஏற்படும் பயங்கரவாதச் சிக்கல்களை எதிர்கொள்வது குறித்து பென்ரகன் ஆலோசனை நடத்திவரும் நிலையில், இந்தியாவின் இப்புவியியல் அமைப்பு அமெரிக்காவைப் பெரிதும் ஈர்த்துள்ளது.

அத்துடன், மத்திய கிழக்கில் தனது நடவடிக்கைகளுக்கு ஆதரவும், துறைமுகம் உள்ளிட்ட உதவிகளையும் தந்துதவக்கூடிய நடு நிலையான நாடொன்று தேவையென அமெரிக்க கடற்படை விரும்புகின்றது.

இந்தவகையில், அனைத்துக் கட்டமைப்பு வசதிகளும் இந்தியா கொணடிருப்பதனால் அங்கு இராணுவத் தளமொன்றை அமைகக அமெரிக்கா விரும்புகின்றதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

## இந்திய எழுத்தாளருக்கு அமெரிக்காவில் வரவேற்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் அதிகமாக விற்பனையாகும் நாவல்களின் பட்டியலில் இந்தியப் பெண் தனுஜா தேசாய் எழுதிய ''பார்ன் கன். பியூஸ்டு'' என்ற நாவலும் இடம்பிடித்துள்ளது.

இந்த நாவல் அமெரிக்காவில் வாழும் இந்தியக் குழந்தைகளின் மனநிலையை விளக்குவதுடன்,

அமெரிக்காவில் வளர்ந்துவரும் டிம்பிள் லாலா என்ற இந்தியப் பெண்ணின் சந்தோஷங்கள் வேதனைகள் ஆகியவற்றையும் இந்த நாவல் எடுத்துக்காட்டுகின்றது. (உ-2)

## அரசியல் நெருக்கடி மத்தியில் லைபீரியாவில் சமாதான முயற்சி

(மன்ரோரியா)

லைபீரிய அரசிற்கும் ஜனநாயக ஐக்கிய முன்னணி கிளர்ச்சிவாதிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான சூழ்நிலை தோன்றியுள்ளதாக அங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

லைபீரிய ஜனாதிபதி சார்ள்ஸ் ரெயிலர், 72 மணித்தியாலங்களிற்குள் பதவி விலக வேண்டுமென ஜனநாயக ஐக்கிய முன்னணிக் கிளர்ச்சிவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையிலேயே இந்த தகவல் வெளியாகியுள்ளது.

எனினும், கிளர்ச்சிவாதிகளின் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளதாகவும், இவர்கள் தமது நிலைகளில் இருந்து 6 கிலோமீற்றர் முன்னேறியுள்ளனர் என்றும் லைபீரிய அரச படைத்தளபதியொருவர் தெரிவிததுள்ளார்.

மேலும், இத்தாக்குதல்களினால் இடம்பெயர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் பொது இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் இவர்கள் உணவு, நீர் மற்றும் மருந்துப் பொருட்களை தேடியலைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-2)

## ஐரோ. ஒன்றியத்தில் அங்கத்துவம் போலந்துக்கும் அங்கீகாரம்

(வார்ஸா)

ஐரோப்பிய ஒன்றியத்தில் அடுத்த வருடம் அங்கத்துவம் வகிப்பது குறித்து போலந்து நடத்திய வாக்கெடுப்பில் சாதகமான பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

இந்த வாக்கெடுப்பில் 78சதவீதத்தினர் ஐரோப்பிய ஒன்றியத்தில் போலந்து அங்கத்துவம் பெறுவதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

ஏனைய 22சதவீதத்தினரே எதிராக வாக்களித்துள்ளனர் என்று அந்நாட்டின் தேர்தல் திணைக்கள பிரதம அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தில்அடுத்தவருடம் மேமாதம் இணையவுள்ள 10நாடுகளில் 6 நாடுகள் இதுவரை சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியுள்ளன.

மோல்டோவா, இஸ்லவேனியா, கங்கேரி, லித்துவேனியா, ஸ்லோவாக்கியா,போலந்து ஆகிய நாடுகளே வாக்கெடுப்புக்களை நடத்தியுள்ளன.

இந்த நாடுகள் அனைத்திலும், ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் பெறுவதற்கு ஆதரவு கிடைத்துள்ளன.

6நாடுகளிலும் 50வீதத்திற்கு மேற்பட்டோர் அந்தந்த நாட்டு அரசாங்கங்களிற்கு தமது ஆதரவை வழங்கியுள்ளன என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (உ-2)



பகலில் சூரிய சக்தியாலும், இரவில் பட்டரி மின்சாரத்தாலும் பறக்கும் விமானத்தை அமெரிக்காவில் நாசா விண்வெளி ஆய்வு மையம் உருவாக்கியுள்ளது. ஹாவாய் தீவிலிருந்து இந்த விமானம் கடந்த 7ம் திகதி புறப்பட்டது. தொடர்ந்து 20மணிநேரம் இந்த விமானம் பறக்கும் எனவும் நாசா விண்வெளி ஆய்வுமையம் கூறியுள்ளது.

## தேர்தலைச் சந்திக்க தயார் — கலைஞர் கருணாநிதி அறைகூவல்

(புதுடில்லி)

எந்தவொரு தேர்தலையும சந்திக்க திராவிடமுன்னேற்றக் கழகம் தயாராகவுள்ளதென அக்கட்சியின் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தி.மு.க.மாவட்டச் செயலாளர்களின் ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மு.கருணாநிதி,

மக்களவைத் தேர்தலுடன சட்டபேரவைத் தேர்தலும் இணைந்து வருமா என்பது குறித்து தற்போது கருத்துக் கூறமுடியாது.

எவ்வாறு தேர்தல்கள் வந்தாலும் அதனைச் சந்திக்க எங்கள் கட்சி தயாராகவேயுள்ளது.

மேலும், தி.மு.கவின்ஜனநாயக முறைப்படி, உட்கட்சிப் பொதுத்தேர்தல்கள் நடத்திப் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்துவிட்டேன் என்றார்.

அதேசமயம், தி.மு.க்வில் தற்போது புதிய பதவிகள் அதிகளவில் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது தவறானது.

140செயலாளர்கள் இருந்த வந்த எமது கட்சியில் தற்போது 85பேராகக் குறைக்கப்பட்டுள்ளமையே உண்மை என்று மேலும் தெரிவித்துள்ளார். (உ-2)



## மைக்கேல் ஜாக்சனுக்கு எதிராக வழக்குத்தாக்கல்



(லொஸ் ஏஞ்சலஸ்)

உலகப் புகழ்பெற்ற பொப் இசைப்பாடகர் மைக்கேல் ஜாக்சனிடம் 6-கோடிரூபா நஷ்டஈடு கோரி அவரது நிதி ஆலோசகர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இவ்வழக்கினை விசாரணைக்கு ஏற்பதா? இல்லையா? என்பது பற்றி லொஸ் ஏஞ்சலஸ் நீதிமன்றம் அடுத்தவாரம் தீர்ப்பைக் கூறவுள்ளது.

இவ்வழக்கு, விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டால், மைக்கேல் ஜாக்சன் நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் ஏறிச் சாட்சிசொல்ல நேரிடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மைக்கல் ஜாக்சன் மீது 60 கோடிரூபா நஷ்டஈடு கோரி வழக்குத் தொடரப்பட்டதற்கான காரணம் எதனையும் லொஸ் ஏஞ்சலஸ் நீதிமன்றம் வெளியிடவில்லை. (உ-2)



சீனாவில் யாங்சி ஆற்றின் குறுக்கே மிகப்பெரிய அணை கட்டப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் அணைநீரில் மூழ்க இருக்கும் ஊஷான் நகரம். உலகிலேயே மிகப்பெரிய நீர் மின்நிலையம் இந்த அணையில் அமைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

## அணுவாயுத உற்பத்தி குறித்த குற்றச்சாட்டை ஈரான் மறுப்பு

(தெஹரான்)

ஈரானின் அணுவாயுதங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் கமல் ஹர்ஷாய் மறுத்துள்ளார்.

அணுஆயுதங்களையோ இரசாயன ஆயுதங்களையோ, கிருமி ஆயுதங்களையோ பயன்படுத்துவதை இஸ்லாம் தடைசெய்துள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈரானிய நாடாளுமன்றத்தில் இதுபற்றி மேலும் பிரஸ்தாபித்த அவர், ஈரான் தனது அணுசக்தி வசதிகளை அமைதி நோக்கங்களிற்காக மட்டுமே பயன்படுத்துகின்றது.

அமைதியான அணுசக்தித் திட்டத்தை கைவிடும் எண்ணம் ஈரானுக்கு இல்லை என்றார்.

சர்வதேச அணுசக்தி ஆய்வாளர்கள் ஈராக் தலைநகர் தெஹரான் போய்ச்சேர்ந்த மறுநாளே இந்த மறுப்பு வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அணுவாயுதப் பாதுகாப்பு விதிகளுக்குக் கீழ்ப்படியத்தவறியதன் மூலம் அணுவாயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தை ஈரான் மீறிவிட்டதாக அண்மையில் சர்வதேச அணுசக்தி ஏஜென்சி கூறியிருந்தது. (உ-9)

## உலக தரிசனம்

### இந்தியர்கள் கைது

(ராபர்ட்)

மொராக்கோ நாட்டிற்குள் சட்டவிரோதமாகச் சென்ற 17இந்தியர்களை அந்நாட்டின் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இந்தச் சட்டவிரோதிகள் ஒரு நாட்டிலிருந்து மற்றைய நாட்டிற்குள் செல்வதற்குத் தேவையான உரிய ஆவணங்கள் எதுவும் இன்றி தமது நாட்டிற்குள் வந்ததையடுத்தே கைது செய்யப்பட்டனர் என்று மொராக்கோ அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை, இவர்கள் அனைவரும் வேலைவாய்ப்புத் தேடி சட்டவிரோதமாக பிறநாடுகளுக்குச் செல்வதற்கு முயன்றவேளையே மொராக்கோவில் வைத்து கைது செய்யப்பட்டிருக்கலாமென இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-2)

## ஓமானில் புதிய தொழில் வாய்ப்புக் கொள்கை

### வெளிநாட்டவர் ஏமாற்றம்

(மஸ்கட்)

வெளிநாட்டுத் தொழிலாளர்களை இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஓமான் நாட்டுப் பிரஜைகளுக்கு அதிக வேலைவாய்ப்பினை வழங்குவதற்கான புதிய 5ஆண்டுத் திட்டமொன்றை ஓமான் அரசு அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் ,இந்த ஆண்டுகளின் இறுதி முதல் காசாளர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், சாரதிகள் போன்ற பணிகளுக்கு ஓமானியர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்று அந்நாட்டின் தொழிலமைச்சு அறிவித்துள்ளது.

ஓமானில் தற்போதுள்ள 20லட்சம் சனத்தொகையில் கால்பங்கினர் பிறநாட்டவர்களே. இவர்கள் எதிர்வரும் 2005ஆம் ஆண்டு முதல் மின்சாரம், நீர்விநியோகம், உதவிப் பொறியியலாளர் பணிகளில் ஈடுபடவும் தடைசெய்யப்படுவார்கள் என்று தொழிலமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. இந்தப் புதிய தொழில் வாய்ப்புக் கொள்கையினால் அங்கு வாழும் வெளிநாட்டவர்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். (உ-2)

## இன்று ஒரு தகவல்

### வரதட்சணை வழங்கல்

''என் மாமனார் எனக்குப் பெண் கொடுத்தார். அதைத் தவிர வேறு எதுவுமே கொடுக்கவில்லை'' என்று ஒருவர் சொன்னார். ''சத்தம் போட்டுச் சொல்லாதீர்கள் சார்... சிறையில் போட்டு விடப்போகிறார்கள்'' என்றார் இன்னொருவர். ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? என்று கேட்டார் அவர். வரதட்சணை வாங்குவதும் தப்பு-கொடுப்பதும் தப்பு! சட்டவிரோதம் என்பது தெரியும் அல்லவா? என்றார் இவர். நான் அதைப்பற்றி எதுவும் சொல்ல வில்லையே என்றார் அவர் . வேறு எதைப்பற்றி? என்று கேட்டார் இவர்.

''என்மாமனார் எனக்குப் பெண்கொடுத்தார். ஆனால் அந்தப் பெண்ணினுடைய சுபாவம் எப்படி என்று முன்கூட்டியே எச்சரிக்கை எதுவும் கொடுக்க வில்லை... அதைத்தான் சொல்ல வந்தேன். அப்படிக் கொடுத்திருந்தால்... குடும்பத்தில் நான் இன்னும் கொஞ்சம் முன்யோசனையோடு நடந்து கொண்டிருப் பேன்'' என்றார். இவர் கவலை இவரோடு இருக்கட்டும். இப்பொழுது நான் சொல்ல வந்த விஷயம் என்னவென் றால், வரதட்சணை தடுப்புச்சட்டம் என்று இப்பொழுது நாம் நிறையப்பேசிக்கொண்டிருக்கிறோமே... இது அந்தக்காலத்திலேயே இருந்திருக்கிறது.

அது சம்பந்தமாக ஒரு கல்வெட்டே இருப்பதாக தொல்பொருள் ஆய்வுத்துறையிலிருந்து தகவல் கொடுத்திருக்கிறார்கள். வட ஆர்க்காடு மாவட்டம் வேலூருக்குப் பக்கத்தில் விரிஞ்சிபுரம் என்று ஓர் ஊர். அந்த ஊரில் ஒரு கோபிநாதப்பெருமாள் கோயில் இருக்கிறது. அதில் ஒரு கல்வெட்டு உள்ளது. கி.பி. 15ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த விஜய நகர அரசர் வீரப்பிரதாப தேவமாராயர் இந்தக் கல்வெட்டு மூலமாக ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்.

இந்தக் காலத்தில் வரதட்சணை என்றால் பெண் ணைப் பெற்றவர்கள் கொடுப்பது என்று தானே பழக்கம். ஆனால் அப்போது மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் கொடுத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் ராஜாவிடம் போய், '' பெண் வீட்டுக் காரர்கள் பண்ணுகிற பிடிவாதம் பொறுக்க முடிய வில்லை'' என்று முறையிட்டிருக்கிறார்கள். உடனே இராஜா பண்டிதர்களை அழைத்தார். ''தர்மசாஸ் திரங்களில் வரதட்சணை கொடுப்பது பற்றிய குறிப்புக்கள் ஏதாவது இருக்கின்றனவா என்று பார்த்துச் சொல்லுங்கள்'' என்றார். பண்டிதர்கள் பெருமாள் கோயிலில் கூடியிருந்து சாஸ்திரங்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்தார்கள். பார்த்து விட்டு ''வரதட் சணை வாங்குவது தர்மத்துக்குப் புறம்பானது''என்று சொல்லிவிட்டார்கள்.

கி.பி .1426ஆம் வருடம் பெப்ரவரி 27ஆம்திகதி விஜய நகர அரசர் வீரப்பிரதாப தேவமாராயர் அளித்த உத்தரவுப்படி மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்கு வரதட்சணையாக பொன் அளிக்கக்கூடாது என்று கல்வெட்டில் எழுதியிருக்கிறது. தமிழர், கன்னடியர், தெலுங்கர், இலாளர் ஆகிய பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரிடம் இருந்து வரதட்சணை பெறக்கூடாது என்றும் அவ்வாறு பெற்றால் அரச தண்டனை அடைவார்கள் என்றும் மன்னர் ஆணையிட்டிருக்கிறார். பிள்ளை வட்டாரும் வரதட்சணை கொடுக்கக்கூடாது என்றும் இதை மீறுபவர்கள் தங்கள் இனத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவார்கள் என்றும் அந்தக் கல்வெட்டில் இருக்கிறது.

இதில் ஒரு விஷயம் பார்த்தீர்களா? அரசன் ஆணை யிட்டாள் மட்டும்போதாது, மக்களும் தங்களுக்குள் கட்டுப்பாட்டோடு இருந்தால்தான் சமுதாயத்துன்பங் களிலிருந்து மீள முடியும் என்பதை அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அதனால் தான், தப்பு பண்ணினால் தங்கள் இனத்திலிருந்து விலக்கப் படுவார்கள் என்றும் ஒரு விதி முறையை வகுத்திருக் கிறார்கள். காலம் எப்படி மாறிக்கொண்டிருக்கிறது பாருங்கள். பிள்ளையைப்பெற்றவர்களுக்குப் பிள்ளை ஒரு சுமையாக இருந்தது ஒரு காலம். பெண்ணைப் பெற்றவர்களுக்குப்பெண் ஒரு சுமையாக இருந்தது ஒரு காலம்.

''இந்தக்காலத்து மாப்பிள்ளை ஒருவர் மாமனாரை தேடிப்போனாராம். என்ன மாப்பிள்ளை? என் பெண் எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டிருக்கிறார் மாமனார். 'உங்கள் பெண் எதற்கெடுத்தாலும் எடுத் தெறிந்து பேசுகிறாள்'' என்று குறைபட்டுக் கொண் டார் மாப்பிள்ளை. ''அதை எப்படி மாப்பிள்ளை சமாளிக் கிறீர்கள்?'' என்று மாமனார்கேட்டார். ''எடுத்தெறி வது எனமேல் படாமல் நான் கொஞ்சம் சாமர்த்தியமாக ஒதுங்க நின்று கொள்கிறேன்!'' என்றார் மாப்பிள்ளை.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இந்திய இராணுவ மருத்துவ அணி மீண்டும் இங்கு வர விருப்பம்

(கொழும்பு)

கேணல் பி.ஜே.எஸ்.சப்ரா தலைமையிலான இந்திய இராணுவத்தின் மருத்துவ அணியினர் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 16 நாட்கள் சேவை புரிந்த பின்னர் கடந்த வெள்ளியன்று நாடு திரும்பினர்.

இவர்களைக் கௌரவிக்கும் வைபவம் ஒன்று கடந்த வியாழனன்று கொழும்பு இராணுவ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இநநிகழ்வில், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, முப்படைத் தளபதிகள் மற்றும் இந்திய இராணுவத்தின் 22 அதிகாரிகளுடன், 202 மருத்துவ உதவியாளர்களும் கலந்து கொண்டனர்.

இவ் வைபவத்தில் இந்திய இராணுவத்தினர் மற்றும் மருத்துவ உதவியாளர்களுக்கு பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

இவர்கள் காலி, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் மொத்தம் 13 ஆயிரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கியிருந்தனர்.

சிக்கல்கள், குறைபாடுகள் பல இருந்தபோதிலும், அவசர உதவி தேவைப்பட்ட சந்தர்ப்பத்தில் வந்து, உதவி வழங்கியதற்காக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

கேணல் சப்ரா அங்கு பேசுகையில், இங்கு எமக்கு எவ்வித பிரச்சினையும் இருக்கவில்லை. மக்கள் எம்முடன் நட்போடு பழகினர். மீண்டும இங்கு விடுமுறையில் வர விரும்புகிறோம் என்றார்.

(இ)

## குடாநாட்டு விவசாயிகள் பணப் பயிர்களில் நாட்டம் உணவுப் பயிர்ச் செய்கை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் என்றுமில்லாத அளவுக்கு மரவள்ளிக் கிழங்கின் விலை உச்சம் பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் மரவள்ளிக் கிழங்கின் விலை மிகமிக வீழ்ச்சியடைந்திருந்த காரணத்தினால் விவசாயிகள் மரவள்ளிச் செய்கையில் நாட்டமற்றிருந்தமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, மரவள்ளிச் செய்கைக்குப் பெயர்போன அச்சுவேலி, நவக்கிரி,தோப்புப் பகுதிகளிலேயே மரவள்ளிச் செய்கை பெரும் வீழ்ச்சி அடைந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது.

தவிரவும், ஏ-9பாதை திறக்கப்பட்டதன பின்னர் குடாநாட்டு விவசாயிகள் புகையிலை , வெங்காயம் ஆகிய பயிர்செய்கையிலேயே அதிகம் நாட்டம்காட்டி வருவதும் உணவுப பயிர்ச்செய்கையை புறம் தளளிவருவதும்இங்குகுறிப்பிடத்தக்கது.

தற்போது குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் உயர்ந்திருப்பதும் தெரிந்ததே.(உ)

## பிரதமர்ரணிலை புலிகள் மதிக்கவில்லை

### சிஹல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகளில் விசுவாசத்துடன் ஈடுபடாதபோதிலும் அவர்களை தொடர்ந்தும் சமாதானப பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு சர்வதேச நாடுகள் வற்புறுத்தி வருவது மிகவும் வருந்தத்தக்க விடயமென சிஹல உறுமய வின் தலைவர் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையோ சர்வதேச நாடுகளையோ மதிக்கவில்லை.

அதற்கு மாறாக நிறைவேற்ற முடியாத நிபந்தனைகளை விதித்து வருகிறார்கள்.

இந்நிலையில்,அவர்களை சமாதானப் பேச்சுவார்த்தையில் தொடர்ந்து ஈடுபடுமாறு சர்வதேச நாடுகள் வற புறுத்தி வருகின்றமை மிகவுமகவலைக்குரிய விடயமாகும் என்றார்.

(உ-10)

## இராசி பபலன்

**10.06. 2003**

(வைகாசி 27, செவ்வாய்)

| | |
|---|---|
| ஏகாதசி பி.இ. | 2.43வரை |
| சித்திரை பி.இ. | 1.12 வரை |
| இராகு காலம் | 2.52-4.22 |
| சுபநேரம் | 10.22-11.52 |

ஏகாதசி விரதம்

**மேடம்**
சௌபாக்கியம், சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம், தொழில் வருமானம்.

**இடபம்**
விருந்துபசாரம, சத்துருஜெயம், ஆரோக்கியம் சந்தோசமான சம்பவம்.

**மிதுனம்**
பிரயாண இடையூறு, காரிய தாமதம், குடும்பக்கவலை, அஜீரண ரோகம்.

**கடகம்**
தாய்வழி உறவு , தன நாசம், முயற்சி தாமதம், ரோக நிலை.

**சிங்கம்**
மனோதைரியம், வாக்குமேன்மை, காரிய சித்தி, தொழில் விருத்தி.

**கன்னி**
கௌரவக்குறைவு, காரியதாமதம், பொருள் விரயம், அதிகாரம்.

**துலாம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, நல்ல முயற்சி, மன மகிழ்ச்சி தொழில் சிறப்பு.

**விருச்சிகம்**
சோம்பல நிலை, உறவினர் உதவி, அலைச்சல், தனவிரயம்.

**தனுசு**
அதிக வருமானம், பெருமைஅடைதல், குடும்ப மகிழ்ச்சி, சயனசுகம்.

**மகரம்**
எடுத்த காரியம் கைகூடும், பெரியோரால் மதிக்கப்படுதல் ,பிரபுத்தனம் ,தொழில் விருத்தி.

**கும்பம்**
மனப்பயம், எதிர்பாராத செலவு,உத்தியோகப் பங்கம், பிரயாணம்.

**மீனம்**
உறவினர் மனத்தாக்கல், ஆரோக்கியக் குறைவு, காரியதாமதம், போசன சுகம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

## பிரதமரின் நெஞ்சுரத்துக்கு ஆசிய நாயகன் விருது நாளை வழங்கிக் கௌரவம்

(கொழும்பு)

''ரைம்'' ஆங்கிலச் சஞ்சிகை சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ''ஆசிய நாயகன்'' விருது வழங்கப்படவிருக்கிறது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் நெஞ்சுரத்துடன் துணிச்சலாக இறங்கியமைக்காக இந்த விருது நாளை டோக்கியோவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

ஏப்ரல் 21ஆம் திகதிய ரைம் சஞ்சிகையில் 2003ஆம் ஆண்டுக்கான நாயகர்களாக தெரிவு செய்யப்பட்ட 21 பேர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

ஜனாதிபதிக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே இடர்நிலைகளைப் பாராது துணிச்சலுடன் செயற்பட்டமைக்காகவே ரணில் விக்கிரம சிங்க இவ்விருதுக்குரியவராகத் தெரிவு செய்யப்பட்டார் என்று ரைம் சஞ்சிகை தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ)



## தமிழ் மொழித் தின கோட்ட மட்டப் போட்டி

(கோப்பாய்)

யாழ். வலயப் பாடசாலைகளுக்கிடையேயான தமிழ் மொழித் தினப் போட்டியின் கோட்ட ரீதியான போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளன.

இந்த வகையில், நல்லூர் கோட்டத்தில் எதிர்வரும் 12,13ஆம் திகதிகளிலும் கோப்பாய்க் கோட்டத்தில் 14,15ஆம் திகதிகளிலும் யாழ். கோட்டத்தில் 16,17ஆம் திகதிகளிலும் தமிழ்மொழித்தின போட்டிகள் நடைபெறவுள்ளன.

வலய மட்டப் போட்டிகள் எதிர்வரும் 20,21ஆம் திகதிகளிலும் வலய மட்ட எழுத்துப்போட்டிகள் 18ஆம்திகதியும கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியல் நடைபெறவுள்ளன. (உ-79)

**இயற்கையின் தேசம் எங்களது இனி வாழ்வு எல்லோரதும்**

யாழ். போதனா வைத்தியசாலை

# வைத்தியர்கள் இன்று பணி நிறுத்தப் போராட்டம்

(யாழ்ப்பணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வைத்தியர்களிடையே காட்டப்படும் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல், வடக்கு, கிழக்கில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு விசேட கொடுப்பனவை வழங்குதல் ஆகிய இரு கோரிக்கைகளை முன் வைத்து இன்று முதல் நாடு முழுவதும் பணி நிறுத்தப் போராட்டத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே.

இதேவேளை,பணி நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தாலும் மனிதாபிமானம் கருதி யாழ். போதானா வைத்திய சாலையில் அவசர சேவைகள் இடம்பெறும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளைச் செயலாளர் டாக்டர் எஸ் குமாரவேல் தெரிவித்துள்ளார். (உ)

# தென்மாகாண கிராமங்களின் அபிவிருத்திக்கு அதிக நிதி

(கொழும்பு)

தென் மாகாணத்தின் கிராமப் புறங்கள் 4 கோடி 27 இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. தென்மாகாண கிராமிய பொருளாதாரத் திட்ட அமைச்சின் கிழ் முன்னெடுக்கப்படவுள்ள இத்திட்டம் எதிர்வரும் 2008ஆம் ஆண்டளவில் பூர்த்தியடையும் என தெரிவிக்கப்படுகிறது.

தனியார் துறையினரின் உதவியுடன் சிறிய நடுத்தரக் கைத்தொழில்களும் இத்தித்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளன. (தி)


ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால் மிதிவெடி, வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான

**சுயமுயற்சிக் கடன் வழங்கல்-திட்டம்**

மிதிவெடி மற்றும் வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில் முகாமைத்துவமும், தொழில்சார் பயிற்சியும், தொழில் ஆரம்பிப்பதற்கான கடன் உதவியும் வழங்க ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD) எண்ணியுள்ளது. இதன் இரண்டாம் கட்டமாக வடமராட்சி பிரிவில் உள்ள பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் நிரந்தரமாக வசிக்கும் பாதிப்புற்றவர்கள் இம்மாதம் 11,12,13 ஆம் திகதிகளில் காலை 10.00 - 2.00 மணிவரை நேரடியாகவந்து தொடர்புகொள்ளவும்.

உங்கள் தொடர்புக்கு:-

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்,
தொழில் பயிற்சி மையம்,
இலகடி, (''சதாபொன்ஸ்'' கல்வி நிலையம் அருகில்)
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(C-6268)



உ
கணபதி துணை



**மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் தேவஸ்தான**

# பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

மெய்யன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் வைகாசித் திங்கள் 28 ஆம் நாள் (11.06.2003) புதன்கிழமை துவாதசி திதியும், சுவாதி நட்சத்திரமும், கர்க்கடக லக்கினமும் கூடிய காலை 8.00 மணிமுதல் 9.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் அருள்மிகு சித்திவிநாயகப் பெருமானுக்கும், சிவகாம சுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராச மூர்த்திக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் திருவருள் கூட்டப் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நிகழவுள்ளது.

வைகாசி மாதம் 27ஆம் திகதி (10.06.2003) செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிமுதல் கணபதி ஓமத்துடன் கிரிகைகள் ஆரம்பமாகும். நவாலியூர் பிரதிஸ்டா சிரோன்மணி பிரம்மஸ்ரீ சாமி விசுவநாதக்குருக்கள் அவர்களால் கிரிகைகள் நிகழ்த்தப்படும்.

அடியார்கள் யாவரும் குறித்த நேரகாலங்களில் திருக்கோயிலை அடைந்து கிரிகைகளையும், அபிஷேகத்தினையும் தரிசித்து எம்பெருமான்னை வணங்கி தங்கள் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம். மேலும் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மகாகும்பாபிஷேகம் 01.09.2003 திகதியில் நிகழவுள்ளது. ஆகையால் அன்பர்களும் சைவ ஆதரவாளர்களும் தங்களால் இயன்ற நிதியுதவி செய்யும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

அயல் கிராமத்தில் வசிப்பவர்கள் இரவு தங்கிநிற்க வசதிகள் உண்டு.

இங்ஙனம்
பொ. வி. திருநாவுக்கரசு *(தர்மகர்த்தா)*
அமரர் இரத்தினசபாபதி குடும்பம்,
கை.கணேசமூர்த்தி.



**உங்கள்**

# வலம்புரியின் வாரமலர் சங்குநாதம்




- புலிகள் இல்லாத யப்பான் மாநாடு சமாதான முயற்சியைப் பாதிக்கும்.
- அரசியல் யாப்பு என்ற இரும்புப் பெட்டகத்தில் பூட்டப்பட்ட தமிழர்களின் உரிமை
- வியாசரின் பதில்
- செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- ஆவடி மாநாடு
- பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை...)
- இடைக்கால நிர்வாக சபையை தட்டிக்கழிக்கிறது அரசு
- இன்னும் பல பல

வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

**சங்குநாதம்**

விலை 14/

## மண் மீட்புடன் மட்டும் நின்றுவிடாது

# பிறமொழிக் கலப்பில் இருந்து தமிழ் மொழியை மீட்க வேண்டும்

## திருக்குறள் கருத்தரங்கில் இளங்குமரன்

(கிளிநொச்சி)

''தமிழ் மொழியின் தூய்மையை நாம் பேணிக்கொள்ள வேண்டுமாயின் எமது தேசியத் தலைவர் எங்களின் மண்ணை மீட்பது போல தமிழ் மொழியையும் பிற மொழிக் கலப்பில் இருந்து மீட்கவேண்டும்.

இவ்வாறு தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற திருக்குறள் கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகையிலேயே இளங்குமரன் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

பிற மொழியைப் பேசாதிருக்க வேண்டுமானால், பிறமொழியைக் கூடிய அளவு பயன்படுத்தாது இருக்க வேண்டும்.

பிள்ளைகளின் பெயர்கள், வீதிகளின் பெயர்கள்,வணிக நிலையங்களின் பெயர்கள் ஆகியவற்றில் பிற மொழியைக் கலக்காது தூய தமிழைப் பயன்படுத்தவேண்டும்.

அவ்வாறு எமது தாய் மொழியான தமிழை பிறமொழிகளுடன் கலந்து போக விடாது பாதுகாத்துக் கொள்வதற்காகவே 'தமிழர் வளர்ச்சிக் கழகம்' என்ற அமைப்பை எமது தலைவர் ஏற்படுத்தியுள்ளார்.

தமிழ் மொழியின் தூய்மை கடந்த சில ஆண்டுகளாக சிதைந்து போயுள்ளதுடன்,பிற மொழிகளுடன் தாராளமாக கலந்துபோய்விட்டது.

எனவே,எமது போராட்டத்தின் நோக்கம் மண்மீட்பு மட்டுமன்றி தமிழர்களின் தாய் மொழியை பிற மொழி ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பதுமாகும்.

அதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். 'எங்கும் தமிழ். எதிலும் தமிழ்' என்ற நிலை உருவாக வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரட்ணம் பேசுகையில்,

எங்கள் தமிழினத்திற்கு தாம் இளைத்து வந்த கொடுமைகளை எண்ணித் தலை குனியும் காலம் இலங்கை அரசிற்கு மிக விரைவில் ஏற்படும். எங்கள் மாணவர்கள் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டபோதும், தமிழீழத்தேசியத் தலைவரின் தீர்க்க தரிசனமான கல்விச் சிந்தனையால் அவர்கள் தலை நிமிர்ந்து நிற்கின்றார்கள்.

எங்கள் மாணவர்களுக்கு இலங்கை அரசினால் இலவசமாக வழங்கப்பட்டு வரும் பாட நூல்களில் ஈழத் தமிழர்களது உரிமை, வரலாறு என்பன மறைக்கப்பட்டுள்ளன.

இதனால், எங்கள் மாணவர்கள் உண்மை வரலாற்றினை அறிந்து கொள்ள முடியாதுள்ளது.

அத்துடன், கடந்த காலங்களில் இலங்கைப்படையினர் மேற்கொண்ட யுத்த நடவடிக்கையால் பல தமிழ்ப் பாடசாலைகள் முற்றாக அழிந்துள்ளன.

சமாதானச் சூழல் ஏற்பட்ட ஆரம்ப காலத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைத்துத் தருவதாகக் கூறிவந்த இலங்கை அரசு, இதனை தீர்க்க இது வரை எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

அதிலும் குறிப்பாக, எங்கள் மாவட்டத்தில் எந்தப் புனரமைப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மாணவர்கள் இன்னும் மரத்தின் கீழும், நிலத்தில் இருந்துமே படிக்கிறார்கள்.

இதேவேளை, தென்னிலங்கைப் பாடசாலைகளில் தேவைக்கு அதிகமான அபிவிருத்திகளும் தளபாடங்களும் , ஆய்வுகூடங்களும், கணனிகளும் தாராளமாக இருக்கின்றன.

இந்நிலையில் எமது மாணவர்கள் பல பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.

எமது மாவட்டத்தில் போதிய ஆய்வுகூட வசதியோ, கணனி வசதியோ செய்து கொடுக்கப்படவில்லை. 21 பாடசாலைகளுக்கு கணனிகள் தேவைப்பட்டபோதும், 6 பாடசாலைகளுக்கு மட்டுமே கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கும் கணனியை இயங்குவதற்கு மின் பிறப்பாக்கி வழங்கப்படவில்லை என்றார். (உ-10)

# கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் திருக்குறள் மாநாடு ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தமிழ்ச்சங்கம் நடத்தும் திருக்குறள் மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமானது.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம் பமான மாநாட்டில், மங்கள விளக்கை அருட்திரு தேவசகாயம் அடிகளாரும், பிரதேச செயலர் பொன். நித்தியானநதனும் ஏற்றிவைக்க, வரவேற்புரையை பத்மநாதனும், தொடக்கவுரையை சங்கச் செயலாளர் வே.பரமநாதபிள் ளையும் நிகழ்த்தினர்.

தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இம் மாநாட்டில்,

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்ற பொருளில் முனைவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், கேடில் விழுச்செல்வம் கல்வி என்ற பொருளில் முனைவர் எஸ். சிவலிங்கராசா, செல்வத்தை தேய்க்கும் படை என்ற பொருளில் எழுத்தாளர் பொன். கணேசமூர்த்தி, தன்னையே கொல்லும் சினம் என்ற பொருளில் ஆசிரியர் ந.விஜயசுந்தரம் மற்றும் மலாய் பல்கலைக்கழக முனைவர் குமரன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். நேற்று 2ஆம் நாள் நிகழ்வில் கலை பண்பாட்டு ஊர்வலமும், கலை நிகழ்வுகளும் இடமபெற்றன. (ந)

## சமாதானத்தில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையைப் போக்க

## காணி அமைச்சர் வன்னி பயணம்

(கொழும்பு)

காணி அமைச்சர் ராஜித சேனாரட்ணா, விரைவில் வன்னி சென்று முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பாக அமைக்கப்பட்ட குழுவினரின் செயற்பாட்டை நேரில் ஆராயவுள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஒன்றரை ஆண்டுகள் கடந்தும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் எந்தவிதமான புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லையென தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றம்சுமத்தி வருவது சமாதானப் பேச்சுவார்த்தையில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், அபிவிருத்தி மற்றும் ஏனைய திட்டங்களை ஒழுங்காக நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது.

அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான நடவடிக்கைக்கு அமைக்கப்பட்ட குழுவினர் விட்ட தவறுகள் வன்னியிலும் ஏற்பட்டு விடக்கூடாது. அவ்வாறு வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனரமைப்பு விடயத்தில் தவறுகள் இடம்பெற்றால் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் சமாதான முன்னெடுப்புக்களில் பெரும் பின்னடைவை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான விடயங்களை காணி அமைச்சர் ராஜித சேனாரட்ணா அபிவிருத்தி மற்றும் மனி



தாபிமான நடவடிக்கைக்கென அமைககப்பட்ட குழுவினரிடம் விளக்கிக்கூறுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

## ரத்வத்தவின் சொத்துக்குறித்த விசாரணை அறிக்கை பூர்த்தி

(கொழும்பு)

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவினதும் அவரது பாரியாரினதும் சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளை பூர்த்தி செய்துள்ளதாக இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழு தெரிவித்துள்ளது. கண்டியிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் அனுருத்த ரத்வத்தைக்குச் சொந்தமான 4 கோடி ரூபா பெறுமதியான சட்டத்துக்குப்புறம்பான வைப்புப்பணச் சான்றிதழ்கள் கண்டுபிடிக்கப்படடதை தொடர்ந்து அது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின் சொக்கு விபரங்கள்



தொடர்பாக, ஜனாதிபதி செயலகத்தில் இருந்தும் பாராளுமன்றத்தில் இருந்தும் இலஞ்ச ஊழல் ஆணைக் குழு அறிக்கைகளைபெற்றுள்ளது.(து)

# செய்தித் துளிகள்

### வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை 5ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஆலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-8)

### போதைப்பொருள் தடுப்பு வாரம்

(சுதுமலை)

போதைப்பொருள் தடுப்பு வாரமாக எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரை பிரகடனப்படுத்தப்படவுள்ளதால், சகல பாடசாலைகளிலும் இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பாடசாலைக் கல்வி அமைச்சின் செயலாளர் எச். எம்.சிறிசேனா கேட்டுள்ளார்.

மேலும், இதற்கான முன் ஆயத்த செயற்பாடுகளை எதிர்வரும் 16ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்குமாறும், இந்நிகழ்வு தொடர்பான மதிப்பீட்டு அறிகையை யூலை மாதம் 5ஆம் திகதிக்கு முன் கோட்டக்கல்வி அதிகாரியுடாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-252)

### தொடர்புகொள்க

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிட்ட நபர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தேவதாசன் வனஜா - 25, எழிலூர் கொழும்புத்துறை, சாந்தி தங்கராஜா - 63, புதிய வீடமைப்புத் திட்டம் குருநகர், மரியதம்பி - பரிசுத்த சிலுவை சுகாதார நிலையம் கடற்கரை வீதி யாழ்ப்பாணம், சவிரிமுத்து மரியகிலேஸ்வரி - 21, நாவலர் வீதி நாவாந்துறை, சின்னப்பு சின்னத்தம்பி - கொட்டபுலம் காரைநகர் கிழக்கு, நாகராஜா நாகலஷ்மி - 1 ஆம் வட்டாரம் அல்லைப் பிட்டி. (உ)

### அ.அட்டைகள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வளவினுள் பத்மநாதன் ஜெகதாம்பிகை என்பவரது தேசிய மற்றும் விசேட அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உரியவர் வந்து பெற்றுக்கொள்ளலாம் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-8)

### நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் பேராசிரியர் அ.துரைராஜாவின் 9ஆவது நினைவஞ்சலிக் கூட்டம நாளை காலை 9.00 மணிக்கு டாக்டர் அ.நவரத்தினராஜா தலைமையில் மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து நினைவுப் பரிசில்கள் வழங்கல் இடம்பெறவுள்ளது. (உ)

### விடைத்தாள் திருத்தும் பணி நிறைவு

(யாழ்ப்பாணம்)

நடைபெற்றுவரும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி இன்றுடன் நிறைவடையவுள்ளது. (உ-7)

### வித்துவான் வேலன் காலமானார்

(கொழும்பு)

ஈழத்து தமிழ் மூதறிஞர்களில் ஒருவரான வித்துவான் க.வேலன் (வயது-80) லண்டனில் நேற்றுமுன் தினம் காலமானார்.

இவர் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

யோகர் சுவாமிகள் பற்றிய ஆய்வின் மூலம் தனது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார். (தி)

## இலங்கைக்கு உதவி வழங்கும் மற்றொரு மாநாடு ஜெனிவாவில்

(கொழும்பு)

தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் உதவிகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இன்று ஜெனிவாவில் இலஙகைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாக சமூக நலன்புரி அமைச்சர் ரவநதிர சமரவீர தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் உள்ள சமூக நலன்புரி அமைச்சு கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கூட்டத்தில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இராணுவத் தளபதிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், அரச,பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (தி)

# பற்களின் ஆரோக்கியம் பேணப்படுவதற்கு பற்தூரிகையின் சரியான பாவனை முக்கியம்

உடல்நலத்திற்கு உறுதுணையாக இருப்பது பற்களேயாகும். ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்கின்ற கூற்று (பிரஷின்) பற்தூரிகையின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகவே உள்ளது. விரலால பறகளைத் தேய்ப்பது முழுமையான பாதுகாப்பாக இராது. தூரிகையைச் சரியாகக் கையாண்டால் மட்டுமே பற்களைப் பாதுகாத்திடலாம்.

### பற்தூரிகை

தூரிகையின் தலைப் பகுதியிலுள்ள நைலோன்கொத்துக்கள்ஒரே அளவில் ஒரே சீரானமட்டத்தில் இருக்க வேண்டும். தூரிகையின் தலைப் பகுதியானது வாயின் உட்புறத்திலுள்ள எல்லாப் பற்களையும் எட்டும் வகையில் சிறியதாக இருக்க வேண்டும். நைலோன் இழைகள் ஈறுகளுக்கு ஊறுவிளை விக்காமலும் , அதேசமயம் பற்களிலுள்ள அழுக்குகளை அகற்றும் தன்மை உடையதாகவும் இருக்க வேண்டும். நைலோன் கொத்துகள் மூன்று அல்லது நான்கு வரிசைகளில் அமைந்திருக்க வேண்டும். நைலோன கொத்துகளுக்கு இடையே உள்ள இடைவெளியானது தூரிகையை நன்கு சுத்தம் செய்வதற்கு ஏதுவாயிருந்தல் வேண்டும். தூரிகையின் தலைப்பகுதி, கூர்மையாக இல்லாது சற்று வளைவாக இருக்க வேண்டும். அதன் மென்மைத் தன்மையைச் சோதித்து அறிய எளிய வழி உண்டு. புறங்கையில் இலேசாகத் தேய்த்துப் பார்த்தால், குத்தாமல் இருந்தால் அது உகந்த பற்தூரிகையாகும், மென்மையும் நடுத்தரமும உள்ளவைதான் அன்றாட உபயோகதுக்கு ஏற்றவையாகும். பற்தூரிகைகளின் கைப்பிடிகளை உங்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு நேரான வற்றையோ, வளைவானவற்றையோ நீங்கள் தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம்.

### பற்களைச் சுத்தம் செய்யும் முறை

கண்ணாடியின்முன் பல்துலக்குவது நலம். கீழ்த்தாடையிலுள்ள பற்களின் முன்பகுதியைத் துலக்குகையில் தூரிகையை ஈறுப்பகுதியில் இருந்து மேற்புறமாகப் பயன்படுத்த வேணடும். மேற்றாடையிலுள்ள பற்களின் முன்பகுதியைத் துலக்கும் பொழுது, ஈறிலிருந்து பற்களை நோக்கி மேலிருந்து கீழ்ப்புறமாக தூரிகையினைட் பயன்படுத்த வேண்டும். பல்லின் ஒரு பகுதியை மட்டும் நீண்ட நேரம் தேய்க்காமல், வாயிலுள்ள எல்லாப் பற்களுககும் சமவாய்ப்பு அளிக்கவேண்டும். நாக்கைத் தூய்மைப்படுத்தப் பல்துலககும் தூரிகையை இலேசாக நாக்கில் தேய்ப்பதனால் தூய்மைசெய்தால் போதும்.

### மருத்துவ விளக்கம்

ஒவ்வொருமுறையும் உணவு உண்ட பின் தூரிகையை இலேசாகப் பயன்படுத்தி பல்லிடுக்குகளில் தேங்கும் உணவுத்துகள்களை அகற்றி வாயைத் தூய்மையாக வைத்துக் கொள்வது மிகவும் சிறந்தமுறை என்றாலும், இதைக்கடைப்பிடிப்பது அன்றாட வாழ்க்கையில் இயலாத ஒன்றாகும். ஒருநாளைக்குக் குறைந்தது இரண்டு முறையாவது நாம் பற்களைத் தூரிகை கொண்டு ஆர, அமர நன்றாகத் துலக்குவது சிறந்த முறையாகும். நாம் ஒவ்வொருமுறையும் பற்களைத் துலக்கும்போது எடுத்துக்கொள்ளும் நேரம், நாம் செலுத்தும்கவனம், வாயையும், பற்களையும் தூய்மைப்படுத்தும் தன்மை இவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இங்கிலாந்து நாட்டிலிருந்து வெளிவரும் புகழ்பெற்ற மருத்துவ இதழின் 'பிரிட்டிஷ் மெடிக்கல் ஜேர்ணல்' **(British Medical Journal)** பற்பசை தொடர்பாக ஆய்வுக்கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. பற்களை வெறும் நீரையும், தூரிகையையும் கொண்டு துலக்குவதும், தூரிகை-பறபசை கொண்டு துலக்குவதும் ஒனறாகும் என அந்த ஆய்வுக் கட்டுரையில் கூறியிருந்தது. வெறும் நீரை மட்டும் பயன்படுத்தி ஒருவன் தனது உடலிலுள்ள அழுக்குகளை முறையாக நன்கு தேய்த்துக் குளிபபதன் மூலமாக எவ்வாறு தன் உடலைத் தூய்மைசெய்ய முடியுமோ, அதேபோல வெறும் நீரையும் தூரிகையையும் பயன்படுத்திப் பற்களை முறையாக நன்கு தேய்த்துவந்தால் மட்டும் போதும். பற்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள முடியும். குளிப்பதற்குச் சோப்பைப் பயன்படுத்துவதால் குளித்பின் தற்காலிக புத்துணர்ச்சி கிடைப்பதுபோல பற்பசையினாலும் கிடைக்கிறது.

### இரவில் பல்துலக்குவது சிறந்த பழக்கம்

பகலில் நாக்கின் அசைவினாலும், உமிழ்நீர் சுரப்பினாலும் வாயிலுள்ள தீமைபுரியும் நுண் உயிர்களின செயல்திறன் ஓரளவு கட்டுப்படுத்தப்படுகிறது. பகலில் நமது பல்லின இடுக்குகளில் தேங்கும் உணவுத துகள்களை நாம் உறங்குவதற்கு முன்னர், பற்களைத் தூரிகை கொண்டு நன்கு தேய்ப்பதன்மூலம் அகற்றாவிட்டால், இரவில் நீண்டநேரம் உணவுத்துகளகள் தங்கவாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் தீய நுண்ணுயிர்கள் தமது அழிவுவேலையை திறமையாகச் செய்ய நிறைய நேரம் கிடைக்கிறது. இதன் விளைவாகப் பற்கள் மிகவும் எளிதாகச் சிதைவடைந்து சொத்தை ஏறபட வாய்ப்பு உள்ளது. இதனால் இரவில் பல்துலக்கும் பழககத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

### பற்தூரிகையை பயன்படுத்தும் முறை

தூரிகையை பல்துலக்கப் பயனபடுத்திய பின்னர், தூய்மையான நீரில் நன்கு தூய்மைப்படுத்தி ஈரமின்றி நன்கு உலரவைக்க வேண்டும். ஈரமுள்ள தூய்மையற்ற தூரிகைகள் பல்லாயிரக் கணக்கான தீய நுண்ணுயிகளின் நாற்றல் கால்களாக மாறககூடும். தூரிகையை நன்கு தூய்மைபடுத்தாமல் ஈரமானநிலையில் குளியல் அறை போன்ற ஈரமான இடங்களில் வைத்தால் ஹேர்பிஸ்-ஜோஸ்டர் என்ற தோல்நோயை உண்டுபண்ணும் வைரஸ் தோன்றும் இது வாய், உதடு, கன்னஙகளில் தோல் தொடர்புடைய நோயைத் தோற்றுவிக்கக்கூடும்.

தூரிகையின் நைலோன் கொத்துகள் ஒழுங்கான வடிவில் இருந்தால் தான் தூரிகையின் மூலம் நல்ல பலனைப் பெறமுடியும். தேய்ந்து உருக்குலைந்த தூரிகையை பயன்படுத்துவதால் பற்களுக்கு எவ்வகையான நன்மையும் விளையாது. மாறாக அது பற்களின் நலனைப் பெரிதும் பாதிக்கக்கூடும். நாட்பட்ட சிதைந்து போன தூரிகைகளைப் பயன்படுத்துவதால் தொண்டை அழற்சிநோய், சைனஸ் நோய், வயிற்றுப்போக்கு, இரப்பை குழிப்புண் போன்ற நோய்கள் ஏற்படக்கூடும். எனவே இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது மாற்றுவது நல்லது. அல்லது உங்கள் தூரிகை தனது உருவத்தை இழந்து வளைய ஆரம்பித்ததும் புதுத் தூரிகையை வாங்குவது சிறநதது ஆகும்.

பற்களைத் தூய்மைப்படுத்தச் சாதாரண பிரஷ்சைத்தவிர இரண்டு வகையான பிரஷ்கள் உள்ளன. 1) எலக்ட்ரிக்பிரஷ் 2)பல்இடுக்கு பிரஷ். எலக்ட்ரிக் பிரஷானது உடல் ஊனமுற்ற குழந்தைகள், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள, நீண்ட நாட்கள் படுக்கையில் இருக்கும் பிணியாளாகள் தங்களால் தூய்மைப்படுத்த இயலாத நிலையில் இது பயன்படுகிறது. பல இடுக்குப் பிரஷானது அளவில் மிகவும் சிறியதாகவும் கூர் உருளை வடிவில் இருக்கும். கைப்பிடியில் நைலோன் கொத்துக்கள் இருக்கும். பல்லின் இடுக்குகளிலுள்ள அழுக்குகளை அகற்ற இந்தப்பிரஷ பயன்படுததப்படுகிறது.

டாக்டர் ஜி.ரவிக்குமார்

தூரிகையில் பற்பசையை வைககும்பொழுது மேல் பகுதியில் மட்டும் வைக்காது, தூரிகையின் இடுக்குகளில் சீராக கொஞ்சம் கொஞ்சமாக எல்லாப் பகுதிகளிலும் படும்படி பரப்புவது நல்லது. இதனால் பற்களின் எல்லாப்பகுதியிலும் பட்டு சமமாகத் தூய்மை பெறும். வீடுகளில் அனைவரும் ஒரே பெட்டியில் பற்தூரிகைகளைப் போடுவது தவறு, ஒன்றிலுள்ள நுண்ணுயிர்கள் மற்றொன்றிற்குப் பரவ வாய்ப்பு உளளது. தனித் தனியாக உலர்த்தி, தனியாக ஆணியில் தலைகீழாகத் தொங்க விட வேண்டும்.

நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்க்கு ஆளாகி அந்தச்சமயத்தில் உபயோகித்த பிரஷ்சை சரியான பிறகும் பயன்படுத்துவது தவறு. மீண்டும் தொற்றுவர வாய்ப்பு உள்ளது. பல்துலக்க பற்பசை ஒரு நிலக்கடலை அளவிற்குப் பயன் படுத்தினால் மட்டும்போதும். நிறையப் பயன்படுத்துவதால் எந்த நன்மையும் கிடைக்கப் போவது இல்லை. நாம் பற்களைத் தேய்ப்பதில் தான் உள்ளது.

* * *

## ஞானச்சுடர் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் மாதாந்தம் வெளியிடப்பட்டுவரும் "ஞானச்சுடர்" வைகாசி மாதஇதழ் வெளிவந்துள்ளது. (உ-10)

## விசேட வகுப்பு

(கோப்பாய்)

க.பொ.த.சாதாரணதர மாணவர்களின் கல்விஅடைவை மேம்படுத்தும் வகையில் கோப்பாய் கல்விக் கோட்டத்திலுள்ள 17 பாடசாலைகளில் மேலதிக விசேட வகுப்புக்களை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-79)

## ஆனைக்கோட்டை பாடசாலை முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்ற மாகாண மட்ட உடற் பயிற்சிப் போட்டியில் ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (உ)

## அடிக்கல் நாட்டல்

(பருத்தித்துறை)

வரலாற்று சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய கிருஷ்ணர், மச்ச அவதாரமாக அவதரித்து வல்லி நாச்சியாரின்மடியில் தோன்றிய கற்கோவளம் கடற்கரையோரத்தில் புதிய ஆலயம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல்நாட்டும் வைபவம் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தீர்த்தக்கரை கிருஷ்ணர் கோவில் பரிபாலனசபைத் தலைவர் நா.சந்திரசேகரன் தலைமையில் எதிர்வரும் 12 ஆம்திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அமைச்சர் தியகேஸ்வரன் அடிக்கல்லை நாட்டி வைக்கவுள்ளார். இதில் நிக்கொட் நிறுவன அதிகாரி இலங்காநேசன், வல்லிபுர ஆழ்வார்ஆலய தர்ம கர்த்தா சபைத்தலைவர் எஸ்.அன்னலிங்கம் மற்றும் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-52)

## விடுதலைப்புலிகளின் உறுதியால் அரசின் ஆசை நிராசையானது

(கொழும்பு)

டோக்கியோவில் நேற்று ஆரம்பமான இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கலந்துகொள்வதன பொருட்டு அரசதரப்பு பிரதிநிதிகள் பயணம் செய்த விமானத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிந்ததாக தெரிவிக்கபபடுகிறது.

டோக்கியோ மாநாட்டில் கலந்துகெள்வதன் பிரகாரம் இலங்கையில் இருந்து அரசதரப்பு பிரதிநிதிகளுடன் இறுதியாக கடந்த சனியன்று புறப்பட்ட விமானத்திலேயே விடுதலைப்புலிகளின் 7 பிரதிநிதிகளுக்கான ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் 'டோககியோ மாநாட்டில் கலந்து கொள்வதில்லை' என்ற முடிவை இறுதி நேரத்திலாவது மாற்றிக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலேயே 7ஆசனங்களும் ஒதுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதேவேளை, கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகமும் இறுதிநேரம் வரை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கான 7விசாக்களை வழங்க தயார்நிலையில் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இடைக்கால நிர்வாகசபை தொடாபாக உறுதியான முடிவொன்றை அறிவிக்காதவிடத்து டோக்கியோ மாநாட்டில் தாம் பஙகுபற்றுவதில்லை என புலிகள் உறுதியும் இறுதியுமாகக் கூறிவந்தது தெரிந்ததே. (உ)

## கம்பி இணைப்பற்ற தொலைபேசி பாவனையில் பெரும் வீழ்ச்சி

(கொழும்பு)

கம்பி இணைப்பற்ற சோட்லஸ் தொலைபேசிப்பாவனை குறைந்து வருவதாக தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆணைக்குழு அண்மையில் விடுத்துள்ள அறிக்கையில்,

2001ஆம் ஆண்டில் இத் தொலைபேசிப்பாவனை ஒரு இலட்சத்து 21ஆயிரமாக இருந்தது. இவ்வெண்ணிக்கை கடந்த வருடத்தில் ஒரு இலட்சத்து 4 ஆயிரமாக குறைவடைந்துள்ளது.

வழமையான தொலைபேசிகளை அதிக எண்ணிக்கையில் ரெலிக்கொம் நிறுவனம் வழங்கியதாலும், கம்பி இணைப்பற்ற தொலைபேசிக் கட்டணங்கள் அண்மையில் அதிகரிக்கப்பட்டதாலும் இவ் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது இரு நிறுவனங்கள் மட்டுமே இத்தகைய தொலைபேசி வசதிகளை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (தி)

## கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பும் விடுதலைப்போருக்கு உத்வேகமளித்தது

### நன்றி பாராட்டுகிறார் செம்மணன்

(தனங்கிளப்பு)

கடந்த யுத்தகாலங்களில் வன்னிப் பிரதேச கூட்டுறவுச் சங்கங்களின்



பங்களிப்பும், யாழ்ப்பாண கூட்டுறவு சங்கங்களின் பங்களிப்பும் எமது விடுதலைப்போருக்கு மிகவும் உறுதுணையும் உத்வேகமும் அளித்துள்ளன.

இதன் காரணமாகவே எமது பலம் அதிகரித்து வருகின்றது. கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பு எமக்கும், எமது மக்களுக்கும் உந்து சக்தியாகத் திகழ்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுபபாளர் செம்மணன்.

யுத்தம்காரணமாக சேதமடைந்து மீண்டும் புனரமைக்கப்பட்ட தென்மராட்சிமேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றபோது, இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரைநிகழ்த்தும்போதே செம்மணன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

யுத்தம்என்பது விடுதலைப்போர். எமது விடுதலைப்போரில் உயிர் தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் என்பன அளவிடமுடியாதவை.

நாம் வன்னியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வந்தபோது இந்தக் கூட்டுறவுச்சங்கம் இடிந்து தரைமட்டமாகக் காணபபட்டது. இன்று இந்தக்கட்டடத்தைப் பார்க்கும்போது மிகவும் சந்தோஷமடைகின்றோம்.

வறுமையில் வாடும் மக்களுக்கு சேவைசெய்ய கூட்டுறவுச் சங்கங்களுக்கேஉரிமை உண்டு. புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 15மாதங்கள் ஆகிவிட்ட நிலையில் 6சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட இணக்கங்களும் எமது மக்களுக்கு எந்தவித பயனையும் அளிக்கவில்லை. யுத்தம் மீண்டும் தொடங்குமோ என்ற ஐயத்தில் மக்கள் உள்ளனர்.

நாம் தற்போது பேச்சுவார்த்தையை தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம். கடந்த சுற்றுப் பேச்சுக்களிலும் காணப்பட்ட இணக்கப்பாடுகளை நிறைவேற்றுங்கள் என அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளோம் எனத் தெரிவித்தார். (உ-37)

## உதட்டுப்பிளவு சத்திர சிகிச்சையில் ஜப்பான் நிபுணர்கள்

(கொழும்பு)

தற்போது இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜப்பானிய வைத்தியநிபுணர்கள் இருவர் வவுனியா வைத்தியசாலையல் உதட்டுப்பிளவுகளுக்கான சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பேராதனை மருத்துவபீட வைத்திய நிபுணர்களுடன் இணைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் இச்சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, 11 சிறுவர்கள் உட்பட 29 பேருக்கு இவ் வைத்தியக்குழு, இவ்வாண்டு முற்பகுதியில் இவ்வைத்தியசாலையில்வைத்து உதடு மற்றும் அண்ணப் பிளவுகளுககான சத்திர சிகிச்சை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (தி)

இடைக்கால நிர்வாக சபை அமைக்க

# பிரதமர் எடுத்துவரும் முயற்சிகள் தமிழர்களை அழிவுக்குள் தள்ளும்

## தமிழ்ச்செல்வன் முன்னெச்சரிக்கை



அரசியல் அமைப்பிற்குட்பட்ட இடைக்கால நிர்வாகசபை ஒன்றை அமைப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுத்துவரும் நடவடிக்கையானது, தமிழ்மக்களை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லவே வழிவகுக்கும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கையின் அரசியல் அமைப்பானது தமிழ் இனத்துக்குத் துரோகம் இழைத்துள்ள ஒரு அரசியல் அமைப்பாகும். புதிதாக உருவாக்கப்பட்ட இந்த அரசியல் அமைப்பு பெரும்பான்மை இன சிங்கள மக்களால் வகுக்கப்பட்டதாலேயே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தீவிரம் அடையக் காரணமாக இருந்தது.

இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முயல்கின்றார் என்றும் இதற்காக அவர் தனது தூதுக்குழுவைக் கிளிநொச்சிக்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்றும் செய்திகள் வெளியானபோதும் ஜனாதிபதியிடம் இருந்து உத்தியோகபூர்வமாக எந்தவிதமான அறிவித்தல்களும் கிடைக்கவில்லை.

அரசியல் அமைப்பிற்கு அப்பால் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அரசாங்கம் கொண்டுள்ள போதும், இடைக்கால நிர்வாக சபையை அரசினால் ஏன் உருவாக்க முயாது? என கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச நாடுகள் அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கூறிய சு.ப.தமிழ்ச்செல்வன் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு எதிராக இந்தியா ஒருபோதும் செயற்படக் கூடாது என்று இந்தியாவைக் கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 79ஆயிரம் குடும்பங்கள் மீள் குடியேற்றம்

## ஐ.நா.உதவி ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 79ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன என அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் ஆணைக்குழுவின் உதவி ஆணையாளர் ஹமால்நூர்ஜான்தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தமது அமைப்பு தொடர்நதும் உதவிகளை வழங்கும் என்று தெரிவித்த உதவி ஆணையாளர்,

தற்போது அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்களில் 63சதவீத மானோர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், அண்மையில் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்த ஹமால் நூர்ஜான் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, புத்தளம் ஆகிய இடங்களிலுள்ள அகதிமுகாம்களைப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (தி)

# சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்கு பற்ற முடியும்

## பிரதமரின் உரைக்கு அமைச்சர் ஹக்கீம் பாராட்டு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களின் விபரங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றைய டோக்கியோ மாநாட்டில் தெளிவுபடுத்தியுள்ளதாக முஸ்லிம் விவகார அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் நேற்று செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

டோக்கியோ மாநாட்டில் பேசுவதற்கு முன்னர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த அரச பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பிரதமர் பின்னர் சில விடயங்களை சேர்த்துக்கொண்டார் முக்கியமாக சமாதானப் பேச்சக்களில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாகப் பங்குபற்றவேண்டியதன் அவசியம் குறித்து உரையாடினார்.

இவ்விடயம் தொடர்பாக தான் மிக நீண்ட நேரமாக பிரதமருடன் நாம் உரையாடினோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடரப்போகும் சமாதானப் பேச்சுக்களின்போது முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாக பற்குபற்றுவார்கள் என பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது எனவும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (தி)

# சரசாலை இந்து மன்றம் நடத்திய பேச்சுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சரசால்ல நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய மஹோற்சவத்தினை முன்னிட்டு சரசாலை இந்து மன்றம் அண்மையில் நடாத்திய பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு,

**பாலர் பிரிவு**

முதலாம் இடம்: க.கீர்த்திகா (சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம்), இரண்டாம் இடம்: த.மிதுலா (சரசாலை அம்பாள் மழலை கல்விப் பூங்கா), மூன்றாம் இடம்: த.புவிந்தன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**ஆரம்பப் பிரிவு**

முதலாம் இடம்: ந.கீர்த்திகா (சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்), இரண்டாம்இடம்: ஆ.அனுஷியா (சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம்), மூன்றாம் இடம்: ரா.ஜெயக்குமார் (சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்).

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்: லோ.மயூரதி (சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம்), இரண்டாம் இடம்: கி.மகிழினி (சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை), மூன்றாம் இடம்: பா.நிரோஜா சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்).

**மத்தியபிரிவு**

முதலாம் இடம்: க.உஷாந்தன் (யா/இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம்:க.யஸ்மிலா (யா/வேம்படி உயர்தரம் பாடசாலை), மூன்றாம் இடம்: இ.ஸ்ரீராம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**மேற்பிரிவு**

முதலாம் இடம்: த.சேந்தன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம்: மு.சதீஜா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம்:கோ.தாட்சாயினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

**அதிமேற்பிரிவு**

முதலாம் இடம் ந.வாணி ஜெயராஜஸ்ரீ (மல்லாவி மத்திய கல்லூரி), பு.மைதிலி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம்: செ.தமயந்தி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி). (உ-8)

# கைலாசபதி விருது தயாபரனுக்கு

(யாழ்ப்பாணம்)

நெருக்கடியான சூழ்நிலைகளின் மத்தியில் செய்தியாளராக பணிபுரிந்ததற்கான 2002ஆம் ஆண்டிறகான பேராசிரியர் கைலாசபதி விருது, ஊடகவியலாளர் தயாபரனுக்கு இலங்கை பத்திராதிபர்கள் சங்கத்தினால் வழங்கப்படுகிறது.

இவ்விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 24ந் திகதி கொழும்பு மவுண்ட்லவினியா ஹோட்டலில் இடம் பெறவுள்ளது. (த)

# போஷாக்கு உணவு தாயாரிப்பு உபகரணங்கள்

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம், தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள 10 முன்பள்ளிகளுக்கு போஷாக்கு உணவு தயாரிக்கும் 7ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்கியுள்ளது.

கடந்த சனியன்று வளர்மதி சனசமூக நிலையத்தில் வைத்து சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். சுப்பிரமணிம் இவ்உபகரணங்களை சம்பந்தப்பட்டவர்களிடம் கையளித்தார்.(உ-77)

# இறுதிப் பரீட்சையில் பத்துப்பேர் சித்தி

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடத்திய 2002ஆம் ஆண்டிற்கான அறநெறிப்பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையில் (இந்து சமயம்) ஊரெழு - சக்திபுரம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப்பாடசாலை மாணவர்கள் 11பேர் தோற்றி 10பேர் சித்தியடைந்துள்ளனர்.

இந்து சமயம், சமயமெய்யியல், சமய இலக்கியம், சமயவாழ்வியல் ஆகிய நான்கு பாடங்கள் உள்ளடக்கி இறுதிச்சான்றிதழ் பரீட்சை வருடாவருடம் நடைபெறுகின்றது.

இப்பரீட்சையில், இப்பாடசாலையைச் சேர்ந்த 3பேர் நான்குபாடங்களிலும் விசேட சித்தியைப் பெற்றுள்ளனர். 4பேர் 3பாடங்களிலும் விசேடசித்தியும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும் பெற்றுள்ளனர். (க)

# ஜப்பான் மாணவர்கள் மூவரை இலங்கை வருமாறு பிரதமர் அழைப்பு

(டோக்கியோ)

இலங்கைக்கு வருமாறு ஜப்பான நாட்டு மாணவர்கள் மூவருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருக்கிறார்.டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜப்பான் சென்றிருக்கும் பிரதமரும் அவரது மனைவி மைத்திரியும் ஹிரோசிமா நகரில் தங்கியுள்ளனர்.

அங்கு இரண்டாம் உலக மகா யுத்தததால் மோசமாகப் பாதிக்கப்பட்ட அந்நகரின் அழிவு வரலாற்றை நினைவு கூரும் நூதனசாலைக்குச் சென்ற போது அங்கு நின்ற மூன்று ஜப்பான் மாணவர்களுக்கே பிரதமர் இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்கின்றார்.

பிரஸ்தாப மாணவர்கள் நூதனசாலைக்குச் சென்ற பிரதமரை அணுகி அவருடன் அளவளாவிய போது தமக்கு இலங்கையைப் பார்க்க வேண்டும் என்று ஆவலாக இருப்பதாகத் தெரிவித்தனர்.

மாணவர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இம் மாணவர்களை எதிர்வரும் ஜூலை மாதம் பாடசாலை விடுமுறையின் போது இலங்கைக்கு அழைத்து வர பிரதமர் ஜப்பானில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு உத்தரவிட்டுள்ளார். (இ)

பேராதனை மாணவர்கள் பங்கேற்ற

# உதை பந்தாட்டப்போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவு

(சுண்டிக்குளி)

நல்லலெண்ண விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை தந்த பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் இங்கு பங்கேற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் இரண்டும் வெற்றி தோல்வியின்றி சமமாக நிறைவு பெற்றன.

கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில்,யாழ். பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணிக்கும், பேராதனைப்பல்கலைக்கழக அணிக்குமிடையில் இடம்பெற்ற ஆட்டத்தில்,இரு அணிகளும் தலா ஒரு கோலைப்போட்டு சம நிலையில் இருந்ததினால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி சமமாக நிறைவு பெற்றது.

மறு நாள் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில், யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் போரதனைப் பல்கலைக்கழக அணிக்குமிடையில் இடம் பெற்ற ஆட்டத்திலும் இரு அணிகளும் தலா ஒரு கோலை மாத்திரமே போட்டதினால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி சமமாகமுடிவுற்றது.(உ-110)

## தரம் 10 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மூத்த எழுத்தாளர்
**அமரர் கே. டானியல்** ஞாபகார்த்தமாக

கட்டுரையின் தலைப்பு
**தொலைக்காட்சியுமமாணவர்களும்**

போட்டியின் விதிகள்:

தரம் பத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 225சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.06.2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**
**கட்டுரைப்போட்டி இல-5**

மாணவர் பெயர்: ........................................
பாடசாலை முகவரி: ........................................
........................................
கற்கும் தரம்: ........................................

உறுதிப்படுத்துகிறேன்

........................................
ஆசிரியர்.

*உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்*
*உள்ளத்துளெல்லாம் உளன்.*
*- குறள்*

வலம்புரி

## பிரதமரின் சுத்துமாத்து

விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபை பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா டோக்கியோ மாநாட்டில் அறிவித்துள்ளமை மிகப்பெரிய ஏமாற்று வித்தையாகும். விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக சபையை ஏன் கோரியிருந்தார்கள் என்பது பற்றி இருட்டடிப்பு செய்த பிரதமர் விடுதலைப் புலிகளுக்கு சர்வதேசத்திற்கு மத்தியில் ஒரு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையிலேயே இடைக்கால நிர்வாக சபை பற்றி டோக்கியோ மாநாட்டில் பிரஸ்தாபித்துள்ளார். விடுதலைப்புலிகள் அரசின் மீது நம்பிக்கையீனம் கொண்டு இடைக்கால நிர்வாக சபையை உருவாக்குமாறு கேட்டிருந்தார்.

அவ்வாறு அரசு இடைக்கால நிர்வாக சபையை அமைக்குமாக இருந்தால், சமாதானப் பேச்சுக்களை தொடர்வதற்கும் டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றுவதற்கும் விடுதலைப்புலிகள் தயாராக இருக்கின்றனர் என்றும் அறிவித்திருந்தனர்.

ஆனால் அதற்கு ஆக்கபூர்வமான பதில் எதனையும் பிரதமர் தெரிவிக்கவில்லை. விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு அபிவிருத்திக் கவுன்சிலை முன்வைத்த பிரதமர், அதனை விடுதலைப்புலிகள் நிராகரித்தவுடன் இரண்டாவது மாற்றுத்திட்டத்தையும் உப்புச்சப்பில்லாமல் தயாரித்தார்.

இதுவும் நிராகரிக்கப்பட்ட நிலையில் டோக்கியோ மாநாட்டில் வைத்து இடைக்கால நிர்வாக சபை அமைப்பது காலத்தின் தேவையென்ற அடிப்படையில் தனது உரையை ஆற்றியுள்ளார்.

இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தேவையானதொன்று எனப் பிரதமர் ஆற்றிய உரை, டோக்கியோ மாநாட்டில் அவர் பெற்ற ஞானமா என்ற கேள்வி இப்போது பலருக்கு ஏற்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது காலத்தின் தேவையென்ற உண்மையை உணர்ந்த பிரதமர் அபிவிருத்திக் கவுன்சில் பற்றிய திட்டத்தைப் புலிகளுக்கு அனுப்பாமல், இடைக்கால நிர்வாக சபையை அமைக்க அரசு தயாராக இருக்கிறது என்ற ஒரு செய்தியை வெளிப்படுத்தியிருந்தால், விடுதலைப்புலிகளும் டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றியிருப்பர்.

அதன் மூலம் எதிர்கால சமாதான நடவடிக்கைகள் சுமுகமாக முன்னெடுக்கப்படுவதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும். எனினும் அவ்வாறு பிரதமர் செய்யாமல் டோக்கியோ மாநாட்டில் வைத்து இடைக்கால நிர்வாக சபை அமைக்கவேண்டியது தேவையானதொன்று எனக் கூறியிருப்பதன் மூலம், டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதை பிரதமர் ரணிலும் விரும்பவில்லை என்பது தெளிவாகிறது.

அதாவது டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றாமல் விடுவதன் மூலம், வழங்கப்படுகின்ற நிதி முழுவதற்கும்,அரசு தனித்து உரிமை கொண்டாட முடியும் என்ற எதிர்பார்ப்பிலேயே பிரதமரின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம்

# போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கின் தேவைகளை ஒட்டிய மதிப்பீடு அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வட கிழக்கு எல்லைப் பரப்புக்களில் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களை ஒட்டிய மதிப்பீடு ஒன்றை யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டில் பிரஸ்தாபிக்கும் வகையில் அனுப்பிவைக்கப்பட்ட இந்த மதிப்பீட்டின் பிரதிகள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா,தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதன் விபரம் வருமாறு;

வடக்குக் கிழக்கை மீளக் கட்டி எழுப்புவதற்கான தேவை மதிப்பீட்டை ஆயத்தப்படுத்த பன்நாட்டு அமைப்புக்களின் உறுப்பினர்களாகிய ஐ.நா. மன்ற அமைப்பும்,உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றியுள்ளனர்.உடனடித் தேவையையும்,இடைக் காலத் தேவையையும் நிறைவேற்றுவதே உதவி நிகழ்ச்சித்திட்ட அமைப்பின் எதிர்பார்பபாகும். அடிமட்ட நிலையை அணுகுவதற்கு வடக்குக் கிழக்கின் முதன்மைத் தேவைகள் சீர்செய்யப்படுவதுடன் மேலதிக நிதியுடன் எப்படி அனைத்துலக உதவு நாடுகள் எம் தேவையை நிறைவேற்ற இருக்கின்றதென்பதை நாம் மீளாய்வு செய்ய வேண்டிய தேவை உண்டு. இதை அடைவதற்கு குடி மக்கள் அமைப்புக்களுடன் உரையாடல நடத்துவது மிக இன்றியமையாதது.

### *மனிதாபிமான சிக்கலும் மீளக் குடியமர்த்தலும்*

இயல்பான வாழ்வை அடைவதற்கு முதன்மை கொடுக்கின்ற பின்வருவனவற்றை கவனம் செலுத்த வேண்டும்.மிதிவெடிப்பகுதிகள் முற்றாக அகற்றப்பட்ட நிலையில் வட கிழக்கில் வசிக்கின்ற பெரும்பான்மை மக்கள் மீண்டும் குடியமர்வதை ஒட்டி உடனடியாக நிவாரண உதவிகள் மனிதாபிமான முறையில் வழங்குவதற்கு மனிதநேய அடிப்படையில் செயற்படல்.

அரசின் ஒன்றிய உதவித்திட்டத்தினீழ உளளூரில் இடம்பெயர்ந்தோர் வாழ்வு பெறுவதற்கு விளக்கத்தை பந்தி 53 எடுத்துக் கூறுகின்றது. எல்லா நிகழ்ச்சி செயற்பாடுகளுக்கும் உள்ளூர் இடம்பெயர்ந்தோர் ஒட்டி ஐ.நா மன்றத்தின் வழிகாட்டும் கோட்பாடுகளை உள்ளடக்கி ஊக்குவிக்கும் செயற்பாடுகளை பந்தி 54 வலியுறுத்துகின்றது. எனவே தம்முடைய சொத்தையோ மீளப் பெறமுடியா மக்களுக்கு உரிய மீள வாழ்வும் இழப்பீடு வழங்குவதற்கு உறுதியளிப்பது அரசின் கடமையாகும்.எனவே பந்தி 53 இல் குறிக் கப்பட்ட கொள்கையை அரசு மீளாய்வு செய்யவேண்டிய தேவை இருக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டை வழங்கமுடியாததுடன் நிதி நெருக்கடி நிலவின் பிணை வழங்குவதன்மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். வாடகை வீடுகளில் இருக்கின்ற குடிபெயர்ந்த உள்ளூர் மக்களுக்கு வாடகை திருப்பிக் கொடுப்பது பற்றி வட்டியில்லாக் கடன்வழியை உடனடி நிவாரணங்களை நிதிவழங்கும் முகவர் ஊடாக வழிமுறைகளைக் காணலாம்.

அத்தோடு நீண்டகால அடிப்படையில் இலகு கடன்களை திருப்பிக் கொடுப்பதற்கு வழி வகுக்கலாம்.

### நலத்துறை

தடுப்பு நிலையிலும் நோய் தீர்க்கும் நிலையிலும் வட கிழக்கில் நலத்துறை கவலைதரும் அளவிற்கு பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இன்றைய நிலையில் யாழ்ப்பாண பயிற்சி மருத்துவ மனையில் நோயாளிகளின் உடனடித் தேவைகளை நிறைவுசெய்ய வழியற்றிருக்கிறது. வர்த்தக சுற்றாடலில் மருத்துவமனை அமைந்திருப்பது நோயாளிகளுக்கு தகுந்ததல்ல என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவமனையில் மக்கள் நெருக்கடியை தவிர்ப்பதற்கு காற்றோட்டமுள்ள விரைவில் உடல்நலம் பெறத்தக்க மருத்துவ அலகுகள் அமைதல் அவசியம். யாழ்ப்பாணப் பண்ணையில் உள்ள மார்புநோய் மருத்துவமனையும், காங்கேசன் துறையிலுள்ள எலும்புருக்கி நோய் (கசம்) மருத்துவமனையும் இடிக்கப் பட்டுள்ளன. இவை மீண்டும் கட்டப் படவேண்டும். தெலலிப்பழையிலுள்ள புற்றுநோய் மருத்துவமனை ஓரளவு திருத்தப்பட்டுள்ளது. எனினும் இம்மருத்துவமனையை மீண்டும் முறையாக செயல்பட தரம் உயர்த்தப்படவேண்டும்.

நூற்றுக்கணக்கான புற்றுநோயாளரின் அவலங்களைத் துடைக்க அல்லது குறைக்க புற்றுநோய் சிறப்பு மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டும். யாழ். மாவட்டத்திற்கு ஒரு உளவியல் மருத்துவப்பிரிவு இன்றியமையாதது. தெல்லிப்பழையில் மாவட்ட மருத்துவமனை எல்லைப் பரப்பில் தேவையான வசதிவாய்ப்புடன் ஓர் புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும். தெல்லிப்பழையில் முடிக்குரிய காணிகள் நிறைய உண்டு.இது மருத்துவ மனைக்கு அருகில் உண்டு. திட்ட மிடப்பட்ட நிலையில மீளமைப்பு நிகழ்வுத் திட்டத்தின் கீழ் தெல்லிப்பழை மாவட்ட மருத்துவ மனை மீளக்கட்டி அமைக்கப்பட்டு அனைத்து தேவைகளையும் நிறைவேற்றுகின்ற மருத்துவ மனையாக் கலாம்.இச்செயற்திட்டத்தை நல்லெண்ண நோக்கத்துடன் உதவி வழங்கும் நாடொன்று இதனை நிறைவேற்றலாம்.

### கல்வியும் விளையாட்டும்

கல்வித்துறையைப் பொறுத்தவரையில் கிராமிய மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கி வீடுகளில் வதியும் பெண்களை ஈடுபடுத்தி பொருளாதாரத் துறையில் பெண்களை முன்னேறச் செய்யலாம். அத்தோடு ஒவ்வொரு கல்வி மட்டத்திலும் பாடசாலையில் இருந்து விலகியோர் அல்லது பாடசாலை செல்லாதோர்,ஊனமுற்றோர் ஆகியோருக்கு ஏற்ற நிலையில் கல்வி நிலையங்களை உருவாக்கல். கல்விக்கும் தொழிலுக்கும் இடையே உள்ள இடைவெளியைக்குறைக்கும் வகையில் தனியார்-அரச பங்காளிகளை கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கி தொழில் நுட்பக் கல்வியை ஊக்குவிக்க முடியும். வடகிழக்கில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தையும் கடற்றொழில் பல்கலைக் கழகத்தையும் உருவாக்குவது ஆக்கபூர்வமாக அமையும்,சூழலை நீண்ட கால அடிப்படையில் பாதுகாப்பதற்கு சூழல் துறை கல்வி நிலையத்தை உருவாக்குதல் வேண்டும்.மேற்குறிப்பிட்டவையோடு ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்காக முழுநிறைவுள்ள மைதானத்தை ஏற்படுத்த வேண்டும். இன்றைய சூழ்நிலையில் இதுமிக அவசியம் எனக் கருதப்படுகிறது.

### *வீடமைத்தல*

கடந்த 20 ஆண்டுகளாக கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களால் பெரும்பான்மையான தமிழர்களின் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன அல்லது பெரும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன. உளளூரில் இடம் பெயர்ந்தோருக்கு ஐ.நா.மன்றத்தின் கோட்பாடுகளுக்கு அமைய தமது வீடுகளை திருப்பிக் கட்டுவதறகு போதிய இழப்பீட்டினை வழங்குவது இலங்கை அரசின் கடமையாகும். கூடாரங்களை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு போதிய நிதிவழங்குவது முதன்மை இடம் பெறவேண்டும்.

பேரழிவுக்கு உள்ளாகியுள்ள வடக்குக் கிழக்குப் பகுதிகளில் விரைவில் மக்கள் மீள்வாழ்வு பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப் படவேண்டும். அபிவிருத்தியைப் பொறுத்தவரை இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் வட கிழக்கு மாகாணங்களுக்குமிடையே இடைவெளி காணப்படுகின்றது.இந்த இடைவெளி நிரப்பப்பட வேண்டும்.மக்களுக்கு நிதி, நீதி, நியாய அடிப்படையில் வழங்குவதில் அ்ரசுக்கு பொருளாதார நெருக்கடி இருப்பின் பாதிக்கப் பட்டோருக்கு மதிப்பிடப்பட்ட இழப் பீட்டிற்குப் பதிலாக உத்தரவாதப் பிணைகளை நிதிவழங்கும் முகவர் களூடாக வழங்க வேண்டும். அத்தோடுவட்டியற்ற கடன்களும் கட்டடங்களை மீளக் கட்ட நிதியுதவி விரைந்து வழங்கப்பட வேண்டும். முழு இழப்பீடு வழங்க முடியாமைக்கு விளக்கம் தருமுறையில் நீண்ட பந்திகளை தந்து ஐ.நா.மன்றத்தின் வழிகாட்டும் கோட்பாடுகளை தட்டிக்கழிக்க நாம் இடமளிக்க முடியாது.

### உட்கட்டமைப்பு

மீள்வாழ்வு வழங்குவது பற்றியும், மீள் கட்டடங்கள் அமைப்பது பற்றியும் பரிசீலிக்கையில் தெருக்கள், புகைவண்டிப் பாதைகள,துறைமுகங்கள், மீன் பிடித்துறை முகங்கள, மின் சக்தி, நீர்ப்பாசனம்,நீர்,நலம் சார்துறைகள்,அஞ்சல் அலுவலகங்கள்,தொலைத் தொடர்பு ஆகியவை முதனமை பெறுகின்றன.இப்பொழுது எடுத்துரைக்கப்பட்டுள்ள நிதி முற்றிலும் போதாதவையாக விளங்குகின்றன. பொல்காவல, வவுனியா புகையிரதப் பாதைகளின் தரத்தை உயர்த்துவதையும் தொடர் வண்டிகளை கொள்வனது செய்வதையும் எப்படி வடக்குக் கிழக்குக்கென ஒதுக்கப்பட்ட 63.5 மில்லியன் தொகைக்கு உள்ளடக்கப்பட்டதையொட்டி நாம் விளக்கமும் தெளிவும் பெற விரும்புகின்றோம்.

வடகிழக்கில் உள்ள பல அஞ்சல் அலுவலகங்களும்,துணை அஞ்சல் அலுவலகங்களும் சேதத்திற்குள்ளாக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் உள்ளன.அவை விரைவில் மீளக் கட்டப்பட்டு தேவையான துணைக் கருவிகள் பொருத்தப்பட வேண்டும். இலங்கைக்கு அன்பளிப்பாக உதவி வழங்கும் நாடுகளுள் ஒன்று முழு நிறைவுள்ள துறைமுகம் ஒன்றை காங்கேசன் துறையில் கட்டித் தரலாம்.பருத்தித்துறைத்துறைமுகத்தையும் மீன் பிடித்துறை முகங்களையும் நாம் வளர்த்தெடுக்க வேண்டும்.இவை தொழில் வளர்ச்சிக்கு பெருந்துணை நிற்கும். மேல் நில நீரின் உப்புத் தன்மையைக் குறைப்பதற்கு உடனடியாக் தொண்டமானாறு திட்டத்திற்கு முழு நிதியிடப்படல் வேண்டும்.

### *வேளாண்மையும் மீன் பிடியும*

வடக்குக் கிழக்கின் தலையாய பொருளாதாரம் வேளாண்மையும் மீன்பிடியையும் உள்ளடக்கியது.இந்த அடிப்படையில் மீன்பிடித்துறை பிரிவு தனியாக அடையாளம் காணப்பட வேண்டும்.ஏழை உழவர்களினதும் மீனவர்களினதும். வாழ்க்கையை உயர்த்த எடுத்துரைக்கப்பட்ட நிதி எவ்விதத்திலும் நிறைவு தருவதாக இல்லை.மாறக பற்றாக்குறையையே வெளப்படுத்துகிறது.

### *வாழ்வியல் தேவைகள*

திறமை பெற்ற ஆட்களின் தகைமையும்அளவையும் அதிகரிக்கும் வகையில் பயிற்சி வழங்குவது தேவையில்லாத்தன்மையை ஓரளவு குறைக்கத் துணை நிற்கும்.தொழில வாயப்பினைப் பெருக்குவதற்கு காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை,லங்கா சீமெந்துத் தொழிற்சாலை,பரந்தன் வேதியல் கூட்டுத் தாபனம்,கிழக்குத்தாள் ஆலைக் கூட்டுத்தாபனம்,உப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் அடையாளம் காணத் தக்க சிறுகைத்தொழிலை மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டிய தேவை உண்டு.

### *இயலளவு வளர்ச்சி*

மீளக்குடியமர்தல், மீளக் கட்டடங்களை எழுப்பல், மறுவாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களை நாம் மீண்டும் செயற்படுத்த மானிட வளத்தையும் உட்கட்டமைப்புத் தேவைகளையும் நாம் பெருக்கியே ஆக வேண்டும். மூன்று மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் செயற்படும் பங்காளிகளாக விளங்க உளளூராட்சி மன்றங்களின் இயல் அளவு உயர்த்தப்பட வேண்டும்.

### நிதியிடலில் *அளவீடுகள்*

22.02.2002 இல் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட போர் இடை நிறுத்த ஒப்பந்தத்தை அடுத்து போரினால் பாதிக்கப்பட்ட வட்க்குக் கிழக்கு மாநிலங்களை பார்வையிட பல வெளிநாட்டுத் தூதுவர்களும் பல நாடடு முகவர் நிலையங்களும் வருகை தந்துள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளோடு இணைந்து வட கிழக்கின் பொருளாதாரத்துக்கு மீள் வாழ்வும் புதுவாழ்வும் வழங்க கணிசமான நிதியை இலங்கை அரசு பெறும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் இலங்கையை மீளமைத்தல் என்ற பெயரில் இலங்கையின் வடகிழக்கு பகுதிகளுக்கு ஒதுக்கப் பட்ட நிதி மிகக் குறைவாகவுள்ளது எமக்கு ஏமாற்றத்தையும் தருகின்றது

எம்முடைய உடனடித் தேவைக்கு தேவையான நிதி வழங்கப் படாததோடு இன்றைய தேசியக் கொள்கைக்கு அமைய, பெரிய பொருளாதார கட்டமைப்புக்கு அமைய நிதிகள் வழங்கப்படாமை மேலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது (பந்திகள் 9,10)

கடந்த 25 ஆண்டுகளாக அமைதியைக் கட்டியெழுப்புவதற்கும் வளர்ச்சியைக் காண்பதற்கும் இலங்கையின் செயற்பாடு நாம் விரும்பிய அளவு அமையவில்லை. போரினால் வடகிழக்கில் ஏற்பட்டுள்ள பேரழிவும் மக்கள் உயரிழப்பும் எல்லோரும் அறிந்ததே. இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் வடகிழக்குமிடையில் பொருளியல் வளர்ச்சியை ஒட்டி பெரும் இடை வெளி நிலவுகிறது. இத்தீவின் ஏனைய பகுதிகளுடன் பொருளியலிலும், அரசியலிலும் வடகிழக்கு தன்பங்கினை ஆற்ற வேண்டுமெனில் இந்த இடைவெளி மிகக் குறுகிய காலத்திற்குள் நீக்கப்பட வேண்டும். நாட்டை வளப்படுத்த அமைதி துணை நிற்கலாம். ஆனால் அமைதியான நட்பில் வளர்ச்சி ஏற்படும் என்பதற்கு உத்தரவாதமில்லை (மேற்கோள்: பேராசிரியர் சண்முகரத்தினம்)

இலங்கையை மீளவளப் படுத்த ஏனைய பகுதிகளுடன் வடகிழக்கை மீளக்கட்டியெழுப்புவதே இன்றைய தேவை ஆகும்.

(உ)

## விபரத் திரட்டு

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள எல்லா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக 5 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிகள் சிகிச்சை நிலையங்கள் என்பனவற்றின் விபரங்கள் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் மூலமாக உலக உணவுத்திட்ட அமைப்புத் திரட்டி வருகின்றது. (உ-252)

## தினசரி தியானம்

### பற்றுகள்

ஓ மனிதனே! பொய்யான பெயர்களையும், உருவங்களையும பாராதே. பெயர்களுக்கும், உருவங்களிற்கும் அப்பால் எப்போதும் பேரின்பமாயிருக்கும் பரம்பொருள் இருக்கிறார். பெயர் மற்றும் உருவங்களைத் தள்ளிவிட்டு, எப்போதும் இந்தப் புதிரான பரம்பொருளுடன் இணைதுக்கொள்ளுங்கள். மகிழ்ச்சி பெறுவீர்கள். பெயர்களிலும், தோற்றங்களிலும் பற்றுவைத்து, இம்மைக்கு உரியவராகி, துன்பத்தில் உழன்று, பிறப்பு, இறப்பு, என்னும் சக்கரங்களின் பிடியில் கட்டுண்டு விடாதீர்கள்.

**சுவாமி சிவானந்தர்**

# யப்பான் மாநாட்டு முடிவுகள் புலிகளிற்கு அறிவிக்கப்படும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(டோக்கியோ)

டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு நிதி உதவிகள் வழங்குவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களை விடுதலைப் புலிகளிற்கு அறிவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாநாட்டு முடிவுகளையும், கிடைக்கவிருக்கும் நிதி தொடர்பான விபரங்களையும் விடுதலைப் புலிகளிற்கு தெரிவிப்பதற்காக யப்பானிய விசேட தூதுவர் யசூஸி அகாஸியை வன்னிக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துவருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா டோக்கியோவில் வைத்து அறிவித்துள்ளார். (வ)

## ஆனந்தசங்கரி யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் யாழ்மாவட்ட எம்.பியுமான வி.ஆனந்தசங்கரி தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார். (வ)

## கொக்குவில் இந்துவில் கணணிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று 2003ம் ஆணடு ஏப்பிரலில் க.பொ.த.உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கணணிப் பயிற்சி எதிர்வரும் 16ம் திகதி ஆரம்பமாக உள்ளது.

க.பொ.த.சாதாரண தரத்தில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திபெற்ற மாணவர்கள் இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் இப்பயிற்சிக் காலம் 3மாதங்கள் நடைபெறும் எனவும் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் அறிவித்துள்ளார். (ந)

## மரம் தறித்தவர்களுக்கு பிணை அனுமதி

(பருத்தித்துறை)

சட்டவிரோதமான முறையில் மரங்களைத் தறித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் தடுத்துவைக்கப்பட்டிருந்த வடமராட்சி கிழக்கு சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்புச்சங்கத் தலைவர் செ.அழகுராசா மற்றும் உபதலைவர் முகுந்தன் ஆகியோர் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துரை மாவட்ட நீதிமன்றில் ஆஜரான இவர்களை நீதிபதி ஏ.பிறேம்சங்கர் தலா 25 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் இருவரின் சரீரப்பிணையிலும் விடுதலை செய்தார்.

அத்துடன் இருவரையும் வடமராட்சி கிழக்குக்கு செல்லக்கூடாதென்றும் சாட்சிகளைச் சந்திக்கக் கூடாதென்றும் பருத்தித்துறை நகரை விட்டு வெளியேறக் கூடாதென்றும் நீதிபதி கடுமையாக் எச்சரிக்கை செய்துள்ளார். (இ-52)

---

### சமாதானப்...

கொள்கிறேன்.

சமஷ்டிக் கூட்டமைப்பு என்று கூறும் போது அது சுயநிர்ணயத்தின் உட்கடடமைப்பாகும்ஆனாலும் இடைக் கால நிர்வாக சபை முறையும் அவர்களை இந்த முறையிலேயே இட்டுச் செல்லக் கூடியதாக இருக்கும்.விடுதலைப் புலிகள் தமக்கு சமாதானப் பேச்சுவார்த்தையில் உள்ள நம்பிக்கையைத் தமிழ் சமூகத்திற்கும். நிதி உதவி வழங்கும் சர்வதேசத்திற்கும் விளக்கும் வகையிலும், நம்பிக்கை ஏற்படக் கூடியவிதத்திலும் விடுதலைப் புலிகள் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும்.

அமெரிக்காவில் நடைபெற்ற மாநாடடில் அவர்களை நாம் அழைக்கவில்லை,காரணம் அவர்கள் தமது உறுப்பினர்களை மனித வெடிகுண்டுகளாக மாற்றுவதில் பிரசித்திபெற்றிருந்தமையே ஆகும்.இலங்கையின் சமாதான முயற்சிகள் வெற்றியடைய வேண்டுமானால்,ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பங்களிப்பு முக்கியமானதாகும்.சமாதானப் பேச்சுவார்த்தையின் இறுதி முடிவுகள் ஜனாதிபதியின் கைகளிலேயே தங்கியுள்ளது என்று கூறிய ஆமிடேஜ், தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்ற அமெரிக்காவின் சட்டபூர்வமான பிரகடனத்தை நீக்குவதாயின் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் இணைய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (ம)

---

### இடைக்காலசபை...

நிதிகளும் சமாதானப் பேச்சுவார்தையில் பங்கு கொள்வது அவசியமானது.

விடுதலைப்புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளாதது வருந்தத் தக்கது. இதனால் வடக்கு கிழக்கு மக்களே உண்மையில் இழப்பைச் சந்திக்கிறார்கள்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளோடு இணைந்து மேற்கொள்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறதென்றும் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இனப பிரச்சினைகு இறுதிக் கட்டத் தீர்வு காணும் போது இலங்கை மக்களின் ஆதரவைப் பெறும் வகையில் மக்கள் கருத்துக் கணிப்புப்பொன்று நடத்தப்படும் என்றும் கூறினார். (இ-5)

## நிறுவன உரிமையாளர் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ மோட்டார் சைக்கிள் மோதியதில், யாழ்ப்பாணம் யசோ மோட்டார்ஸ் நிறுவன உரிமையாளர் சிவகுரு யசோதரன் (வயது-35) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று மாலை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது. (இ-5)

---

### டோக்கியோ...

றிச்சாட் ஆமிடேஜ் தலைமையில் 13 அதிகாரிகளும்,

இலங்கையின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்,ரவூப் ஹக்கீம்,மிலிந்த மொறகொட,கே.என்.சொக்ஸி,பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன்,பிரதமரின் ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம்,திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்வத்த,சட்டமாஅதிபர் கமலசபேசன் மத்திய வங்கி ஆளுநர் ஜெயவர்த்தனா உட்பட 37 பிரதிநிதிகளும்கலந்து கொண்டனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கி,ஆசிய கைத் தொழில் அமைப்பு,ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய அமைப்பு,சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்,சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான நிதியம்,சர்வதேச ஊழியர் அமைப்பு,உலக சுகாதார ஸ்தாபனம்,உலக உணவுத். திட்டம், உலக வங்கி உட்பட 22 சர்வதேச அமைப்புக்களும் கலந்து கொண்டன.

இம் மாநாட்டில் இலங்கை அரசு எதிர்பார்த்ததைவிட கூடுதலான நிதி உதவி கிடைத்துள்ளத்தாகவும்,3 பிலலியன் அமெரிக்க டொலர்நிதி உதவியை அரசு எதிர்பார்த்த போதும், நேற்றைய மாநாட்டின் பின்னர் 3.6 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி கிடைத்துள்ளதாகவும்,இன்று நடைபெறவுள்ள செய்தியாளர் மாநாட்டில் இலங்கைக்கு கிடைக்க விருக்கும் மொத்த நிதியுதவியின் தொகை வெளியிடப்படவுள்ள தாகவும் மாநாட்டு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

# கொழும்பு- தூத்துக்குடி கப்பல் சேவை விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் பயணிகள் சேவையை ஆரம்பிப்பதற்கு இந்திய மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்திய அரசின் அனுமதி கிடைத்துள்ளதையடுத்து வெகு விரைவில் கொழும்பு துறைமுகத்திற்கும் தூத்துக்குடித் துறைமுகத்துக்குமிடையில் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடர்பாக ஆராயவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுமென இந்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் இலங்கை விஜயம் செய்யவுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிடலான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக இலங்கை அரசு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சாட்ஆம்டேஜ்ஜும் அளவளாவிக் கொண்டிருக்கின்றனர்.

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

PROFESSOR ALAGAIAH THURAIRAJAH MEMORIAL LECTURE

Date & Time: 11th June 2003 at 3.00p.m.

Vemie: Kailasapathy Auditorium, University of Jaffna.

Delivered by: ProfessorH.Sriyananda, Professor of Electrical Engineering, Open University of Sri lanka.

Title: 'ENGINEERING EDUCATION FOR THE NEW WORLD ORDER'

Those who are interested are cordially invited

Vice-Chancellor

(c/6270)

பாலைவனச் சோலை ஊழியம் நடத்தும்

இயேசுவின் இன்பப் பெருவிழா

| இடம் | திகதி | நேரம் |
| --- | --- | --- |
| மானிப்பாய் செல்லமுத்து மைதானம் | ஆனி (ஜுன்) மாதம் 12,13,14,15 | பிற்பகல் 4.30 மணி |



தேவ செய்தியாளர்

சகோதரி பத்மா முதலியார்

(சென்னை, இந்தியா)

பாவம், வியாதி, பில்லிசூனியம், கடன்பாரம், இவைகளில் இருந்து உடனே விடுதலைபெற குடும்பமாக வாருங்கள்
கூட்ட முடிவில் ஜெப எண்ணெய் இலவசமாய் வழங்கப்படும்.

சிறப்புப் பாடல்கள்:
சகோ. ஜான்ஜேபேஸ் & குழுவினர்

இயேசு இன்றும் அற்புதம் செய்கிறார்

அனுமதி இலவசம்!!

குறிப்பு: ஆனி(ஜுன்) மாதம் 13,14காலை 9.30மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் ஊழியர்கள் விசுவாசிகளுக்கான வேதபடிப்பு நடைபெறும்.

தொடர்பு: யாழ்குடா ஊழியர் ஐக்கியம்

போன்:222-3653,222-2930,222-3286

(c/6269)

... இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.